பக்கங்கள்-16 | மாசி 09,2014 | விலை-30.00

விளம்பரங்கள்
அனைத்துவகையான
விளம்பரங்களையும்
பிரசுரிக்க
நாடுங்கள்...
தினப்புயல்
154, 6ம் ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

அன்பான வாசக நெஞ்சங்களே
எமது
தினப்புயல் பத்திரிகை
தொடர்பான அனைத்து
விமர்சனங்களையும்,
ஆக்கங்களையும்
வரவேற்கின்றோம்.

மலர்-01 | Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885 Email:tthinappuyalnews@yahoo.com | இதழ் - 71



## சனல் - 4 ஆவணப்படங்களும், ஐ.நாவின் நிலைப்பாடும்

## தமிழர் விவகாரம் தொடர்பில் அமெரிக்காவின் குள்ளநரி விளையாட்டு

## மவுசாகலை நீர்த்தேக்கத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலை என்ன?

Vanni Inn

email : vanni_inn@yahoo.com

Chinese, Indian, Sri Lankan Food available



HOTEL VANNI INN



A/C Room, Non A/C Room, Com Room
Quality Foods, Hall, Vachel Parking

2nd Cross Street, Vavuniya.

Tel : 024 2222074 , Fax : 024 2222074

# சனல் 4 ஆவணப்படங்களும் ஐ.நாவின் நிலைப்பாடும்

இலங்கையில் போர் முடிவடைந்து 4 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் தமிழ் மக்களுக்கான நல்லதொரு தீர்வினை இதுவரைகாலமும் பெற்றுக்கொடுப்பதாக பல நாடுகள் வாய்ப்பேச்சளவில் கூறிய நிலையிலேயே எதிர்வருகின்ற மார்ச் மாதம் ஐ.நாவில் நடைபெறவிருக்கும் தமிழ் மக்களுக்கான கூட்டத்தொடரில் தீர்வு காணப்படுமா என்ற கேள்வியும் தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக எழுந்துள்ள நிலையில் சனல் 4 தொலைக்காட்சி பல்வேறு கோணங்களில் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்களை அம்பலப்படுத்தியுள்ளது.

மட்டுமன்றி கெலம் மக்கரே அவர்களும் இலங்கைக்கு கடந்த வருடத்தில் விஜயம்செய்துவெற்றிகரமாக தனது ஆவணங்களை வழங்கி நாடு திரும்பிய செய்தியையும் அனைவரும் அறிந்திருப்பீர்கள். 4 ஜூன் 2011 அன்று பொதுவாக இலங்கை படுகொலைகள் போர்க்குற்றங்கள், மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் நடைபெற்றதற்கான முக்கிய ஆவணப்படங்களை வெளியிட்டிருந்தது. இலங்கையில் கொலைக்களம் ஆவணப்படப்பகுதி போர்க்குற்றங்கள் என்கின்ற தலைப்பில் 2012 மார்ச் 14 இல் சனல் 4 வெளியிட்டிருந்தது. மிகத் தெளிவான சம்பவங்களின் அடிப்படையில் இந்த ஆவணப்படங்கள் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



இலங்கை இராணுவத்தினர் தமிழ் மக்களுக்கு முதலுதவிகளையும் நிவாரணங்களையும் வழங்கியுள்ளதற்கான ஆதார பூர்வமான ஆவணப்படங்ளை வைத்துள்ளது. இதனொரு கட்டமாக வயோதிபர்கள், சிறுவர்கள், இளம் பெண்கள், காயப்பட்டவர்கள் போன்றவர்கள் படகின் மூலம் ஏற்றிச்செல்லப்படும் காட்சிகள் அவர்களுக்கு அவசரச்சிகிச்சை அளிக்கும் காட்சிகள் என்பனவும் இவ்வாவணப்படங்களுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மீதும் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் மீதும் இனவெறி பிடித்த இராணுவத்தின் ஒரு சில பற்றாலியன்கள் இவர்களை சித்திரவதை செய்யும் படியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கானதும் அதற்கான ஒலிநாடாக்களையும், தொலைபேசியில் ஒட்டுக்கேட்ட தகவல்களையும் மொனிட்டரிங் செய்து சனல் 4 தொலைக்காட்சி தம் வசம்வைத்துள்ளது. விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை விட ஏனைய பெண்களும் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட காட்சிகள் ஏராளம் இருப்பதாகவும் தேவைக்கேற்ற தருணங்களில் படங்களை வெளியிட முடியும் எனவும் சனல் 4 அறிவித்துள்ளது. இதனை அடிப்படையாகக்கொண்டும் தமிழ் மக்கள் மீது நல்லதொரு தீர்வினை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் ஐ.நா சபை இதுவரையில் செயற்பட்டதா என்று பார்க்கின்பொழுது வெறுமமே செயலமர்வுகளும், அறிமுகச் சந்திப்புக்களும் இவர்கள் சந்தித்த பின்னர் சிறிது நாட்கள் ஒருசில விடயங்கள் அமுலில் இருக்கும். அதன் பின்னர் பழைய குருடி கதவைத் திறடி என்கின்ற கதையாகிப் போய்விடும்.

இலங்கை அரசாங்கம் சனல் 4 தொலைக்காட்சி ஊடகவியலாளர்களை ஏன் இலங்கையினுள் அனுமதித்தது என்று பார்க்கின்றபொழுது, ஜனநாயக முறையில் தான் இவர்களை வருவதற்கு அனுமதித்தோம் ஆனால் பொதுமக்களே இவர்களின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்ததாகக் காட்டி சர்வதேசத்தை நம்பவைப்பதற்கான அரசாங்கத்தின் ஒரு நாடகமாகவே அனைவரும் இதனைக் கருதுகின்றனர்.

இன்னொரு வகையில் பார்க்கின்றபொழுதுமுள்ளிவாய்க்காலில் ஏற்பட்ட அழிவுகள் அதன் இறுதிநாட்களில் ஐ.நாவாக இருந்தாலும் சரி, தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் மீது அக்கறை காட்டிய நாடுகளாக இருந்தாலும் சரி கண்மூடித்தனமாக இருந்துவிட்டு தற்பொழுது இலங்கை விவகாரத்தின் மீது தலையிட்டு தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுத்து தங்களுடைய அரசியலை காய்நகர்த்துவதற்கான முன்நடவடிக்கைகளை அரங்கேற்றி வருகின்றார்களே தவிர அனைத்து உலக நாடுகளின் உள்நோக்கம் என்னவென்றால் இவை கண்துடைப்பாகவே இருக்குமிடத்து உள்நாட்டு பிரச்சினையை மஹிந்த ராஜபக்ஷ அவர்களே தீர்த்துக்கொள்ளட்டும் என்பதேயாகும்.

ஐ.நாடுகள் சபையினை நம்பி அல்லது இந்தியாவை நம்பி, இறுதிநேரத்தில் நோர்வேயை நம்பி தமிழ்மக்கள் ஏமாந்துபோனதுதான் மிச்சம். இன்றும் கூட தமிழ் மக்களின் உரிமை கொடுக்கப்படுகிறது என்று கூறிக்கொள்கின்றார்களே தவிர உரிய முறையில் தமிழ்மக்களுக்கான உரிமைகள் கொடுக்கப்படுவதில்லை. தமிழ்மக்களுக்காக உண்மையாகக் குரல் கொடுக்கும் அரசியல்வாதிகள் இலங்கையரசினால் பழி வாங்கப்படுகிறார்கள். இல்லையேல் மண்ணைவிட்டு விண்ணுலகிற்கு அனுப்பப்படுகிறார்கள் இவைதான் அன்றுதொட்டு இன்றுவரை நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற விடயமாகும். குறிப்பாக சொல்லப்போனால் ஒரு போர்க்களத்தில் அதன் ஒரு உக்கிரமான கட்டத்தில் இருதரப்பிலும் இழப்புக்கள் அழிவுகள் வருவது வழைமையானதொன்றே. ஆனால் சரணடைந்த தமிழ் மக்களையும் போராளிகளையும மிருகத்தனமாக நடத்தி கொலை செய்தது என்பதுதான் இன்று ஐ.நாசபை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இருப்பதற்குரிய காரணமாகும்.

இன்று அமெரிக்கா தனது விருப்பத்திற்கு சிரியா, ஈராக், லிபியா, வடகொரியா, தாய்லாந்து, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் வலுக்கட்டாயமாக தனது படைநடவடிக்கைகளையும் பாலியல் நடவடிக்கைகளையும் மேற்கொண்ட ஒளிப்பதிவு ஆவணப்படங்களும் இல்லாமலில்லை. ஈராக்கில் சதான் ஹூசைனை கொன்றொழிக்கும் சமர் 2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்றது. அப்பொழுது அங்கு வாழ்கின்ற சதாம் ஹூசைனின் குடியரசுப்படைகள் (Rebublican military) 2000 இற்கு மேற்பட்டோர் இருந்தனர். இவர்களை ஒரே நேரத்தில் விசவாயு தாக்கத்தின் மூலம் அவர்களை உயிருடன் பிடித்து சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்ட காட்சிகளும் ஆவணங்களாகவே உள்ளன. இச்சம்பவங்களை பார்த்து ஐக்கியநாடுகள் சபை என்றாவது அமெரிக்காவுக்கு எதிராக முடிவுகளை எடுத்திருக்கின்றதா இல்லை. ஆனால் இலங்கையரசு தமிழ்மக்களுக்கான விடுதலைப் போராட்டத்தில் கண்மூடித்தனமாகக் கொல்லப்பட்ட காட்சிகள் ஒலிநாடாக்களாகக் காட்டப்பட்டதனால் அமெரிக்காவின் உதவியுடன் ஐ.நாசபை ஒரு தீர்வினைக் கொண்டுவரவேண்டும் என்று பாசாங்கு காட்டுகிறது. இதில் ஒரு விடயத்தினைக் குறிப்பிட்டாகவேண்டும். ஈராக் மீது போர்தொடுக்கும் காலகட்டங்களில் அது உலகப்போராக வெடிக்கும் என்று பலராலும் எதிர்பார்க்கப்பட்டது.

அதற்காக அப்பொழுது இருந்த வணக்கத்துக்குரிய போப்.ஆண்டவரை மனிதப்கேடயமாக அங்கு அனுப்பி இப்போரை நிறுத்தவேண்டும் என்று பலநாடுகளும் முயற்சித்தது. பாப்பரசரின் சொல்லை அமெரிக்கா கேட்கும் என நினைத்தனர். அது மட்டுமல்லாது அப்போது ஐ.நாவின் செயலாளராக இருந்த கோபி அனான் கூட ஈராக் மீது அவ்வாறான தாக்குதல் நடத்தக்கூடாது என எச்சரித்திருந்த போதும் ஐநாவின் செயலாளரையே மாற்றிடுவோம் எனக்கூறி அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுத்தது. அப்பொழுது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் ஜோர்ஜ் புஷ் என்பது குறிப்பிடத்தக்கது. அதுபோல கடல், வான், தரை என 18 கட்டமைப்புக்களை தன்னகத்தே வைத்திருந்த விடுதலைப்புலிகள் எவ்வாறு ஒரு கணப்பொழுதில் அழித்தொழிக்கப்பட்டார்கள் இதன் பின்னணி என்ன என்று பார்க்கின்றபொழுது பல காரணங்கள் இருப்பினும் முக்கியமாக அமெரிக்காவின் தலையீடே ஆகும்.

அப்பொழுதிருந்த நோர்வேயின் இலங்கைக்கான சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹேய்ம் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கையரசிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தம் வகித்தவர். இவரின் முயற்சியால் ஒஸ்லோ பேச்சுவார்த்தையுடன் இடைக்கால நிர்வாகமும் இலங்கையில் கொண்டுவரப்பட்டது. இக்காலகட்டத்தில் தான் விடுதலைப்புலிகளின் புலனாய்வு இலங்கை, அமெரிக்கா, நோர்வே அரசினாலும் உள்வாங்கப்பட்டு அதன் கட்டமைப்புக்கள் சீர்குலைக்கப்பட்டது. தமிழீழ வைப்பகம் உட்பட அனைத்து கட்டமைப்புக்களையும் உருவாக்குவதன் மூலமே சர்வதேசம் உங்களது போராட்டத்தினை அங்கீகரிக்கும் என விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு வேதமோதியதும் எரிக்சொல்ஹேய்மே. போராட்டப்பாதையில் தான் வெற்றி கிடைக்கும் என நம்பியிருந்த பிரபாகரனின் மனம் சற்று தளர்வடையும் நிலைக்குத் தள்ளப்பட்ட போதிலும் பிரபாரன் தனது போராட்ட உறுதியினை இறுதிவரை கைவிடவில்லை.

இன்று உலக வரலாற்றில் பிரபாகரனின் போராட்டம் எழுதப்பட்டிருக்கின்றது என்று சொல்வதைவிட தமிழ்மக்களின் தமிழ் மக்களின் போராட்ட வரலாறுக்கு ஒரு தமிழ்மகன் தடம்பதித்துக்கொடுத்திருக்கின்றான் எனக் கூறுவது சாலச்சிறந்தது. ஜே.ஆர் ஜெயவர்த்தன தொடக்கம் மஹிந்த வரையிலாக இருந்த ஆட்சியாளர்களுக்கு பாடம் புகட்டியவர் பிரபாகரன். இந்திய அரசு விடுதலைப்புலிகள் மீது கருணை காட்டும் வரையிலும் எந்தவொரு நாடுகளும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை எட்டிப்பார்க்கவில்லை. ஆனால் இந்தியாவிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ராஜீவ் காந்தியின் கொலைக்குப்பின் தமிழீழ விடுதலைப்புலிகளை அணுகுவதென்பது ஏனைய நாடுகளுக்கு சுலபமாக அமைந்தது. இந்தியாவைமீறிஎந்தவொரு நாடுகளுக்கும் ஒரு அடியேனும் எடுத்துவைக்க முடியாமல் இருந்தது. ஆனால் இப்பொழுது இந்தியாவும் விடுதலைப்புலிகளும் எதிரிகளாகிய பின்னர் நம்நாட்டுக்குள் பல்வேறு நாடுகளும் காலடி எடுத்துவைக்கத் தொடங்கிவிட்டன. இதன் விளைவாக இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் தலையீடு இலங்கை மீது இருக்கக்கூடாது என அமெரிக்கா பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவதுபோல இலங்கைவிவகாரத்தில் நுட்பமாக செயற்பட ஆரம்பித்தது.

தனது தேவை எதுவோ அதனை பூர்த்தி செய்யும் நோக்கிலே அமெரிக்கா செயற்படுகிறதே தவிர தமிழ் மக்கள் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் மீதா அக்கறையாக செயற்படுகிறது என அர்த்தமில்லை. மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரையில்ஐ.நாசபைஎன்னதான் தீர்மானத்தினைக் கொண்டுவந்தாலும் அதற்கு ஆஞ்சப்போவதில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்துவருகின்றார். முள்ளிவாய்க்கால் படுகொலை தொடர்பில் பெரும்பான்மையான இனமாகிய சிங்கள மக்கள் எந்தவொரு கட்டத்திலும் மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தவில்லை. மாறாக தென்னிலங்கையில் வெடிகொழுத்தியும் கைளைக்கொட்டியும் சிரித்தார்களே தவிர இனவழிப்பு என்பதை அம்மக்களும் நிரூபித்துக்காட்டியிருந்தனர்.

இக்காலகட்டத்தினைப் பார்க்கின்றபொழுது வடகிழக்கில் செறிந்து வாழ்கின்ற தமிழ் மக்கள் ஐ.நா சபை தமக்கானதொரு தீர்வுத்திட்டத்தினைக் கொண்டுவரும் என்று எதிர்பார்த்தவண்ணம் உள்ளனர். திம்பு முதல் டோக்கியோ வரையான பேச்சுக்களை நழுவவிட்டபின்னர் நல்லதொரு கட்டமைப்பை தன்னகத்தே வைத்துகொண்டு பேச்சுவார்த்தையினை நழுவவிட்டபின்னர் கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் எதற்கு என்ற பழமொழியைப் போல செயற்பாடுகள் அமையக்கூடாது. இதில் தமிழ் மக்களாகிய நாம் விழிப்பாக இருக்கவேண்டும். தியாகி திலீபன் கூறிது போல் மக்கள் புரட்சி எங்கு வெடிக்கிறதோ அங்கு சுதந்திரமாக மக்கள் வாழலாம் என்பதை இனிவரும் தமிழ் மக்களுடைய போராட்டங்கள் தமிழினத்தையும் தமிழ்த்தேசியத்தினையும் வலுப்படுத்மே தவிர ஐ.நாடுகள் சபையும் சனல் 4 ஆவணப்படங்களும் தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுக்கொடுக்க மாட்டாது என்பதுதன் உண்மை.

மணிகட்டிய மாடு எனக் கருதப்படும் அமெரிக்கா தமிழ் மக்கள் மீது இரக்கம் காட்டி ஒரு தீர்வினைப் பெற்றுக்கொடுக்குமாயின் அது சாத்தியப்படுமே தவிர வேறு எந்த நாடுகளின் தீர்வுத் திட்டங்களும் இங்கு செல்லுபடியற்றதொன்றாகவே அமையப்பெறும் என்பதில் எவ்விதசந்தேகமுமில்லை.

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, வேப்ப ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## யாரை நம்புவது தமிழ்மக்கள்!!!

ஐக்கிய நரடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தொடருக்கான நாட்கள் மிக நெருங்கிக்கொண்டிருக்கும் நிலையில் இலங்கையின் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விவாதங்கள் சூடுபிடித்துள்ளன. இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றை நடத்த ஐக்கிய அமெரிக்காவும், பிரித்தானியாவும் ஒருபுறம் கைக் கோர்த்துக் கொண்டுள்ளன. மறுபுறம் இலங்கை பாரிய யுத்தக் குற்ற நாடு என்று அறிவிப்பதற்கு, கனடா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா போன்ற நாடுகளில் வசிக்கின்ற இலங்கை தமிழ் மக்கள் முயற்சித்து வருகின்றனர்.

இன்னொருபுறம் சர்வதேசத்தை பகைத்துக் கொண்டு இலங்கை அரசாங்கம் தொடர்ந்து தன்னிச்சையாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. தம்மீதான குற்றச்சாட்டுகளையும் மறுத்து வருகிறது. வெளிநாட்டு இராஜதந்திரிகள் சிலருக்கு நாட்டில் பிரவேசிக்க அனுமதி மறுத்து வருகிறது. உள்நாட்டில் மக்கள் மூலம் ஆர்ப்பாட்டங்களை நடத்தி சர்வதேசத்துக்கு தமது கண்டனத்தை தெரிவித்துவருகிறது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்போ சர்வதேச ரீதியிலாக பிரேரிக்கப்படப்போகும் தீர்மானத்துக்காக காத்திருக்கிறது. வடமாகாண முதலமைச்சரும்கூட இந்நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் இலங்கையானது ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் ரோம் நியதிச்சட்டத்தைஏற்றுகையொப்பமிடவில்லை. பிரித்தானிய நியதிச்சட்டத்தை முன்வைத்தே செயற்படுகிறது. இதனால் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றினாலும்கூட சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கைக்கு எதிராக யுத்த குற்ற விசாரணைகளை நேரடியாக மேற்கொள்ள முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் அங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபைக்கு அனுப்பப்படாதுவிட்டாலும் அதனால் இலங்கைக்குப் பாதிப்புக்கள் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஒரு சர்வதேச விசாரணை ஆணைக்குழுவை அமைக்கும் சாத்தியமே தற்போது உருவாகியுள்ளது. இதனால்தான் நட்புநாடுகளின் ஆதரவை இலங்கை திரட்ட முற்படுகிறது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டு வரப்படும் மனிதவுரிமை மீறல் பிரேரணைக்கு அவுஸ்ரேலியா மற்றும் ரஷ்யா ஆகிய நரடுகள் ஆதரவளிக்கப் போவதில்லை என்று தெரிவிக்கின்றன. பிரச்சினைகள் தொடர்பிலான தீர்மானங்களை எடுக்கும் உரிமை இலங்கைக்கு கிடைக்க வேண்டும் என்று கூறுவதுடன் குற்றச்சாட்டுகள் தொடர்பில் உள்நாட்டு விசாரணை நடத்துவதையே இவை வலியுறுத்துகின்றன.

இப்படியான சூழ்நிலையில் இலங்கைக்கு ஆதரவான நாடுகளின் எண்ணிக்கையும் வரவர அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதனால் இம்முறை மாநாட்டினூடாக இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பில் சரியான நீதி பெற்றுக் கொடுக்கப்படுமா என்ற சந்தேகம் தோன்றியுள்ளது. சர்வதேசம், இலங்கை ஜனாதிபதியையா?, முதலமைச்சர் சீ.வி விக்னேஸ்வரனையா? தமிழ்த்தேசியக்கூட்டமைப்பையா? இவர்களில் யாரை நம்புவது என்ற கேள்வியுடன் தமிழ்மக்களின் ஐ.நா விவகாரம் தொடர்கிறது.

# உலகவரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

03

இதில் குறிப்பிடக்கூடிய விடயம் என்னவென்றால் அசோகாவின் கொம்பனி தவிர்ந்த மற்றைய கொம்பனிகளும் சிறப்புப்படையணிகள். இந்த சிறப்புப்படையணிகளுக்குச் சமமாக இரு மடங்கு அதிகரிக்கப்பட்ட மூன்று நேர உணவு இருநேரச் சிற்றுண்டிகள் பால், முட்டைகள் சிறப்புப்படையணியின் அதே ஓய்வற்ற கடினமான தொடர் பயிற்சி மாலதி படையணிக்கும் வழங்கப்பட்டது.



அதிகரிக்கப்பட்ட உணவைச் சாப்பிட முடியாமல் திணறிய அசோகாவழன் கொம்பனி உணவு மிச்சம் விட்டால் கிடைக்கும்ஒறுப்புக்குப்பயத்தில்கடற்கரை மணலுக்குள் உணவைப்புதைத்து வைத்துவிட்டு தனது வழமையான அளவு உணவோடு சிறப்புப்படையணிகள் செய்த அனைத்துப் பயிற்சிகளையும் சளைக்காமல் செய்து முடித்த விடயம் எல்லாம் முடிந்து வெளியே வந்து இவர்கள் சொல்லும்வரை யாருக்கும் தெரியாது. சொன்னபின் வழங்கப்பட்ட ஒறுப்புபற்றி யாருக்கும் இவர்கள் சொன்னதில்லை.

பயிற்சிகள் முடிந்த பின்னர் சிறப்புப்படையணிகள் இரண்டும் மக்களற்ற வலிகாமத்தினுள் சிறிலங்காப்படைகளுக்கு எதிரான நடவடிக்கைகளைச் செய்வதற்காகப் போய்விட்டன.

அதேநேரம் பூனகரிப்பகுதியில் சூரிகலாவின் கொம்பனியுடன் லெப். கேணல் நிஸ்மியா நின்றார். வேறுபடையணிகளின் கொம்பனிகளும் அங்கே வலிந்த தாக்குதல் பயிற்சியில் ஈடுபட்டிருந்தன. இவர்களின் திட்டம் ஊரியான் பகுதியால் உள்நுழைந்து ஆனையிறவைத் தாக்கியழிப்பதாகும். இவர்களுக்குரிய தரவுகளை முகுந்தாவின் அணி திரட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தது.

1996இன் முற்பகுதியில் பெண் போராளிக்ளின் 33ஆவது பயிற்சிப்பாசறை வரமராட்சி பொலிகண்டியில் அமைந்திருந்த சுகி தளத்திலும் நவிண்டிலில் அமைந்திருந்த 2.2 தளத்திலும் கேணல் துர்க்கா தலைமையில் நடைபெற்று முடிந்திருந்தது. அப்பாசறையிலிருந்து வெளியேறியவர்கள் மாலதி படையணியோடு உள்வாங்கப்பட்டிருந்தனர். அவர்களுள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலர் அருந்ததி பாசறையில் கனரக ஆயுதப்பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இப்படி எல்லோருமே ஒவ்வொரு முனையில் வெவ்வேறு தயார்படுத்தல்களோடு சண்டை ஒன்றுக்கான வாய்ப்புக்காக காத்திருக்க தலைவரிடமிருந்து ஒரு தகவல் வந்தது. படைத்தரப்பு மேலும் ஒரு நகர்வைச் செய்யவுள்ளதால் அதற்கான எதிர் நடவடிக்கைக்கு தயாரகும்படி சொல்லப்பட்டது.

சூரியக்கதிர் – 01 மூலம் வலிகாமத்தை வலிந்து பிடித்த புகழ் மயக்கத்திலிருந்து ரத்வத்தை விடுபடாத காலம் அது. சிங்களவருக்கெனப் புத்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தீவு என்ற முழு இலங்கை பற்றி பேரரசுக் கனவு அவரை உந்தியது. தன் மங்காத புகழை வலிகாம எல்லையோடு முடக்கிவிடுவதில் அவருக்கு சற்றும் உடன்பாடில்லை. சூரியக்கதிர் – 02 இனைச் செய்வதற்கான நன்நாளைத் தேடத்தொடங்கினார்.

நாங்களும் சுறுசுறுப்பாகினோம். படையினரின் நடவடிக்கைகள் எம்மால் அவதானிக்கப்பட்டன. திட்டப் பயிற்சியில் ஈடுபட்டவாறு வன்னியிலும், நாகர்கோயிலிலும் புலோப்பளையிலும் நின்ற கொம்பனிகள் அவசரமாக வரவழைக்கப்பட்டன. அவை வலிகாமத்தை நோக்கியவாறு தென்மராட்சி, வடமராட்சிபகுதியில்காவல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டன.

பொலிகண்டியில் வந்து நின்ற மைதிலி தலைமையிலான வேவு அணி யாக்கரை, மண்டான், வாதரவத்தை பகுதிகளில் வேவு பார்க்குமாறு கேணல் விதுஷாவால் பணிக்கப்பட்டது. வேவு அணியை மூன்று அணியாகப் பிரித்து அவர் வழியனுப்பினார். அவர்களது கடினமான உழைப்பின் பயனாக படையினர் காப்பரண்கள் தொடர் நிலைகளைப் பற்றிய தகவல்களும் வரைபடங்களும் வரத்தொடங்கின. அதற்கேற்ப எமது இரண்டு கொம்பனிகள் முறியடிப்புத்தாக்குதல் செய்யும் தயார் நிலையோடு நிலப்பரப்பை காத்து நின்றன.

புமிலாவின் கொம்பனி வடமராட்சியில் உள்ள வாதரவத்தை, கப்புதூ, மண்டான் பகுதிகளில் தொடர் காப்பரண்களை அமைத்து நிலைகொண்டது. அசோகாவின் கொம்பனி மண்டான் தொடங்கி வல்லைவெளி வீதியில் தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் கோயில் வரை தாத்தா தலைமையிலான ஜெயந்தன் படையணியும் நின்றது. வாதரவத்தைக்கும் யாக்கரைக்கும் இடைப்பட்ட மண்டான் வல்வை வெளி முழுவதும் உப்புவெளிகள். தொண்டமனாற்றில் உப்பேரி மழைக்காலங்களில் . பெருகும். அப்படி பெருகி ஓடுகின்ற மழை நீர் கடல் நீரையும் சேர்த்து வல்வை வெளியூடே வடமராட்சி கிழக்கை நோக்கி பாயும். நீரோட்டம் முடிந்த பின்னர் குறிப்பிட்ட சில இடங்களில் தேங்கி நிற்கும் நீர் கோடைக்கு உப்பாகும். மண்டான் யாக்கரையும் முழுநிலமுமே உப்பு விளையும் நிலங்கள் இல்லையாயினும் உப்பின் இயல்பை அந்நிலங்கள் வெளிக்காட்டும். பரந்த உப்பு வெளிகள், சதுப்பு நிலம், உவர் நிலம், பாளம் பாளமாக வெடித்த நிலம் இவற்றினிடையே சிறு சிறு பற்றைகள் பூவரசு மரங்கள் இடையிட்டு சில பனைமரங்கள் புவியியல் ரீதியில் அது போர் ஒன்றுக்கு ஏற்ற பகுதியல்ல, மனிதர் வாழ்வதற்கு அது பொருத்தமான இடமுமல்ல, எனினும் நாம் அங்கு நிலைகொண்டோம்.

1987இல் சிறிலங்காப்படைகள் விடுதலை நடவடிக்கை மூலம் வடமராட்சி பகுதியை வலிந்து பிடித்தபோது தென்மராட்சி நோக்கிய திசையில் அமைந்திருந்த வடமராட்சியின் கடைசி நகரான கப்புதூவுக்கு படையினர் வரவில்லை. பரந்திருந்த உப்புவெளிக்கும் அப்பால் நீண்ட தூரத்தில் தனித்த ஊராக கப்புதூ இருந்தாலும் அப்பகுதிகள் போருக்கு உகந்த பகுதியாக இல்லை என்பதாலுமே இராணுவம் இங்கு வரவில்லை என்று வடமராட்சி மக்கள் அந்த நேரம் சொன்னார்கள். இராணுவ நடவடிக்கைக்கு அஞ்சி ஊர் பிரிந்த வடமராட்சி மக்கள் யாக்கரை வெளியூடே தென்மராட்சி நோக்கிய தமது நடைப்பயணத்தை தொடர்ந்த போது கப்புதூ கிராமத்தின் அனேகமான கிணறுகள் வற்றிப்போயிருந்தன. முன்னேறிவந்த சிறிலங்காப்படைகள் உப்புவெளி தொடங்கும் இடத்தில் கரவெட்டியின் பின்புறம் அமைந்திருந்த யாக்கரையில் உப்புவெளியைப் பார்த்தவாறிருந்த பிள்ளையாரின் யானைத் தலையை உடைத்து இரத்தம் ஒழுகியவாறிருந்த ஒரு ஆட்டுத் தலையைப் பொருத்தியதோடு நின்றுகொண்டிருந்தன.

இத்தகைய நிலப்பகுதியில் பமிலாவின் கொம்பனி மிகக்கடுமையான நாட்களைச் சந்தித்தது. சாதகமற்ற நிலத்திலே சாதகமான பகுதிகளைத்தேடி காப்பரண்கள் பதுங்குகுழிகளை அமைத்தனர். கடுமையான நாட்கள் என்று இரு சொற்களில் சொல்லிவிட முடியாத கடுமை. உண்மையில் கொடுமை அது. வானத்தையே கூரையாக பயன்படுத்திய இவர்களை நடுப்பகலில் மார்ச் மாத வெயில் வறுத்தெடுத்தது. அதற்கு நேர்மாறாக இரவில் குளிர் நடுங்கியது. வீசுகின்ற காற்று உப்பை சுமந்து வந்து உடலை எப்போதும் பிசுபிசுப்பாகவே வைத்திருந்தது. ஓய்வில்லாத வேலையால் பெருகிய வியர்வை உடலை எரித்தது. உடைகள் மிகவேகமாய் பழுதடைந்து இற்றுப்போகத் தொடங்கின. குடிநீர் எடுப்பதற்கு நீண்ட நடைப் பயணங்களை மேற்கொண்டனர். குளிப்பதற்கும் அப்படியே.

தொடரும்...


### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 6. | கப்டன் பிரியா | நாகராணி சித்திரவேல் | மன்னார் | 1996.04.19 | கனகம்புளியடி சூரியக்கதிர் -2 |
| 7. | மேஜர் மாதுரி | துஷ்யந்தினி தங்கராசா | யாழ்ப்பாணம் | 1996.04.19 | கனகம்புளியடி சூரியக்கதிர் -2 |
| 8. | வீ.வே நிரோ | லதா மகாலிங்கம் | மட்டக்களப்பு | 1996.04.20 | சாவகச்சேரி சூரியக்கதிர் -2 |
| 9. | கப்டன் முல்லை | கிருஸ்ணஜோதி சதாசிவம் | யாழ்ப்பாணம் | 1996.04.20 | சாவகச்சேரி சூரியக்கதிர் -2 |
| 10. | 2ஆம் லெப்ரிணண்ட் சிவானந்தி | சிறீதேவி கந்தசாமி | யாழ்ப்பாணம் | 1996.04.25 | கச்சாய் சூரியக்கதிர் -2 (வி.அ) |

# தமிழர் விவகாரம் தொடர்பில் அமெரிக்காவின் குள்ளநரி விளையாட்டு

சர்வதேச அரசியல் விளையாட்டரங்கில் ஆசியாவின் முக்கிய நாடாக இலங்கை இன்று மாறியுள்ளது. இந்துசமுத்திர நாடுகளில் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் சர்வதேசத்தின் கவனிப்பை பெற்றவை. இவற்றில் ஒட்டுண்ணி நாடாக இல்லாமல் தன்மை ஆசிய பிராந்தியத்தின் வல்லரசாக மாற்றிவரும் இந்தியாவை தமது பகடைக்காயாக பயன்படுத்த முடியாத நிலையில் உலக வல்லரசுகளினதும், தாபனங்களினதும் பெரும் கவனிப்புக்குரியதாக கருதப்படுவது இலங்கை மட்டுமே. இதனால் புவியியல் நன்மைகளால் அரசியல், பொருளியல் ரீதியாக அதிக பயன்கொண்ட தீவகமாக உள்ள இலங்கை பற்றிய பேச்சுக்கள் இன்று முக்கியம் பெற்றிருப்பதில் வியப்புக்களில்லை.

ஆனால் ஒரு இறைமையுள்ள



நாடு என்ற வகையில் இலங்கை மீது நேரடியாக கைவைக்க முடியாத நிலையில் இலங்கையை அணுகும் வழிமுறையாகவே இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தமும் யுத்தம் நிறைவடைந்து 5 வருட காலத்தில் மனித உரிமைகள் தொடர்பான பலவீனமும் என்ற துருப்புச்சீட்டின் கீழ் சர்வதேச வல்லரசுகளின் தீர்மானம் எனும் அணுகுமுறை இன்று உருவாகி அதன் நிறைவுக் கட்டத்தையும் நெருங்க உள்ளது. இதன் பிரதிபலன் ஐ.நா மனித உரிமை பேரவையில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான மற்றொருபிரேரணை கொண்டுவரப்படும் சூழ்நிலையை உறுதிப்படுத்தியுள்ளது. எனினும் நீர்த்துப் போகக்கூடிய ஒரு தீர்மானமாக இது அமையப்போகிறது என்பது அண்மைய நாட்களாக வெளிவரும் கருத்துக்களைக்கொண்டு உணரமுடிகிறது.

உலகளாவிய ரீதியில் இலங்கைத் தமிழர் விவகாரம்தொடர்பில் கொடுக்கப்படும் அழுத்தத்தின் கனதியைப் பொறுத்தே இலங்கைக்கு எதிராக வழங்கப்படும் தீர்மானத்தின் கனதியும் அமைந்திருக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

இலங்கையில் நடைபெற்ற விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் தமிழ்மக்கள் இலக்குவைத்து அழித்தொழிக்கப்பட்டனர். இன அழிப்பு எனும் இலக்கை நோக்கியே அரசாங்கம் கொத்துக்குண்டுப் பிரயோகங்களையும், நச்சுக்குண்டு வீச்சுக்களையும் நடத்தியது என்ற கருத்தும் கருத்துக்கான வாய்மொழி ஆதாரங்களும் பாதிக்கப்பட்ட எஞ்சியுள்ள தமிழ் மக்களிடம் இருக்கின்றது. இந்நிலையில் சர்வதேச ரீதியாக இலங்கை மீது அழுத்தம் கொடுக்கப்பட்ட இது பலமான ஒரு ஆதாரமாக உள்ளது.

மற்றொன்று நாடுகடந்து வாழும் தமிழ்மக்களின் எதிர்ப்புக்குரல் மிகப்பெரிய சக்தியாக அமைந்துள்ளது. இலங்கையில் நடைபெற்ற இனப்பிரச்சினை காரணமாக மிகப்பெரியதொரு மக்கள் கூட்டம் இன்று உலகெங்கும் பரந்து வாழ்கிறது. நாடுகடந்த தமிழீழம் என்ற அமைப்பாக இன்று செயற்படுமளவுக்கு புலம்பெயர் தமிழ்மக்களின் செல்வாக்கு காணப்படுகிறது. இந்நிலமையில் இலங்கையில் தமிழ்மக்கள் மீதான மனிதஉரிமை மீறல்கள் தொடர்பில் அதிகமாக சர்வதேச அரசுகளினதும் ஊடகங்களினதும் கவனத்துக்கு கொண்டு வந்ததில் இம்மக்களது பங்களிப்பு மிக அதிகமே. இன்று இலங்கையில் உள்ள தமிழ்மக்களின் குரலைவிட புலம்பெயர் தமிழர்களின் குரல் இலங்கை அரசுக்கு எதிராக ஓங்கி ஒலிக்கின்றது என்று கூறலாம்.

மூன்றாவது வலிமையான ஆதாரமாக மனித உரிமைகள் ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை மற்றும் பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் மனித உரிமையாளர்கள்



சர்வதேச ஊடகங்கள் போன்றன இலங்கையில் நேரடியாக விஜயம் செய்து களநிலமைகளின் நேரடியான அனுகூலங்களைப் பெற்றதுடன் தேவையான ஆதாரங்களையும் வைத்திருக்கின்றமை கூடுதல் அழுத்தத்தை தரத்தக்க காரணியாகும். இலங்கைக்கு போரின்பின் வருகை தந்திருக்கும் சர்வதேச நாட்டவர்கள் மற்றும் ஊடகங்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஒரே கருத்தையே வெளிப்படுத்தி வந்துள்ளனர். அதாவது போரின்போது தமிழ் மக்கள் அதிகளவான மனித உரிமை மீறல்களுக்கு உட்பட்டுள்ளனர். போரின் பின்னர்தொடங்கி இன்றுவரையிலுமான நாட்களில் மனித உரிமை விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளில் போதிய திருப்தி இன்மை. ஆகவே சர்வதேச ரீதியாக ஐ.நாடுகள் சபையின் மனித உரிமைக் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் சூடு பிடித்திருக்க இந்த 3 காரணங்களும் முக்கியமாக உள்ளன. இவற்றைவிட வேறு சில காரணங்களும் இருக்கின்றன. இவற்றில் அமெரிக்காவின் தலையீடு இன்று கவனிப்பை பெற்றிருக்கின்றது.

சர்வதேச அரங்கில் தன் வல்லாதிக்கத்தை நிலைநாட்டியுள்ள அமெரிக்காவின் தலையீடானது இலங்கை விவகாரத்தில் முக்கிய திருப்பமாக அமையும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. தவிரவும் தமிழ்மக்களின் குரலாக காண்பிக்கப்படும் வடமாகாண சபைக்கும் அமெரிக்கா முக்கியத்துவம் கொடுப்பது போலவேபடுகிறது. காரணம் அமெரிக்காவிலிருந்து அண்மையில் வருகை தந்திருந்த தெற்கு மத்திய ஆசியப் பிராந்திய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செலாளரான நிஷா தேசாய் பிஸ்வால் மாகாணசபையின் கருத்துக்களையும் செவிமடுத்திருந்தார். இந்நிலையில் அமெரிக்காவின் தற்போதைய அணுகுமுறை அதன் குள்ளநரித்தன அரசியலை ஓரளவு நம்பும்படியாகத்தான் செய்கிறது.

அத்துடன் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணை பற்றிய நம்பிக்கையும் வலுவடைந்து வருகிறது. இதற்காக தீர்மானம் தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகிறது. இதற்கு பிரித்தானியாவும் கூடுதல் பலம் சேர்க்கும் என நம்பப்படுகின்றது. ஆனால் இத்தீர்மானத்தின் பிரதிபலன் எத்தனை வலிமையாக இருக்கும் என்பதில்தான் சந்தேகமே உள்ளது. ஏனெனில் இதற்கு முதல் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களே இதற்கு நல்ல உதாரணங்கள். இதில் இந்தியாவின் பங்களிப்பு விசேடமாக இருந்தது.

2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு பிறகு இலங்கைப் பிரச்சினை உள்நாட்டு விவகாரமாக மாறிவிட்டதான நிலையில் மஹிந்த அரசாங்கம் சர்வதேசத்திலிருந்து எழுந்துள்ள அழுத்தம் தொடர்பில் பெரிதளவில் அலட்டிக்கொள்ளாமல் தான் வந்திருக்கிறது. இது ஒருபுறமிருக்க அமெரிக்காவின் தீர்மான நிலைப்பாட்டுக்கு வருவோம். 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ஐ.நாவின் 19வது கூட்டத்தொடரில் இலங்கை மீது 1ஆவது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதில் 24 நாடுகள் ஆதரவாகவும், 15 நாடுகள் எதிராகவும் வாக்களித்திருந்தன. 2013 மார்ச்சில் நடந்த 2ஆவது கூட்டத்தொடரில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட 2ஆவது கண்டனத் தீர்மானத்துக்கு 25 நாடுகள் ஆதரவா கவும் 13 நாடுகள் எதிராகவும் வாக்களித்திருந்தன. மேலும் 2013 டிசம்பரில் சேவைக்காலம் முடிவுற்ற நிலையில் 14 நாடுகள் வெளியேற 14 நாடுகள் புதிதாக அங்கத்துவம் பெற்றன. இதில் பிரிட்டன் முக்கியமானது. இந்நிலையில் இம்முறை நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் மீதான ஆதரவான வாக்களிப்பு எண்ணிக்கை அதிகமாகவே அமையும். இது இலங்கைக்கெதிரான தீர்மானத்தை பலப்படுத்துவதாகவே அமையும்.

ஆனால் இப்போது இது பிரச்சினையல்ல. தீர்மானம் நிறைவேறுவது உறுதி. ஆனால் அத்தீர்மானத்தின் வீரியம் எப்படி இருக்கப்போகிறது என்பதுதான் சந்தேகத்தை உருவாக்கிவிட்டிருக்கிறது. அதாவது கடந்த வருடத்தில் அமெரிக்காவின் தீர்மானமானது கடமைக்காக நிறைவேற்றப்பட்ட ஒன்றாகவே அமைந்திருந்தது நாமறிந்ததே. இந்தியாவின் ஆலோசனையை பெற்ற அமெரிக்கா கடந்த முறை தீர்மானத்தில் 4 முறை திருத்தங்களை செய்திருந்தது. குறிப்பாக அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் நீக்கப்பட்டிருந்தன. அதனால் அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்த போதும் இலங்கை அரசாங்கம் அதுபற்றி கவலை கொண்டிருக்கவில்லை. இந்த நிலைமை இம்முறையும் ஏற்பட்டுவிடுமோ என்று கருதப்படுகின்றது. இதனால் தான் அமெரிக்க இராஜாங்க திணைக்கள அதிகாரிகளின் இலங்கை விஜயமும் அதன் பிரதிபலிப்புக்களும் இலங்கையை போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு இட்டுச்செல்லும் என்று அறுதியுடன் கூறமுடியாதுள்ளது.

தவிர அமெரிக்காவின் இன்றுவரையிலுமான நிலைப்பாடு உள்நாட்டுத் தீர்வு யோசனை தொடர்பாகவே அமைந்திருக்கிறது. சர்வதேச விசாரணை தீர்மானம் நடைமுறைச்சாத்தியமானது என்பது அமெரிக்கா உட்பட இலங்கைக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருக்கும் நாடுகளுக்கும் தெரிந்ததே. விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என்ற பட்டியலில் சேர்த்ததுமுதல் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அழிவுக்கு உதவியதும் அமெரிக்காவே. தமிழ்மக்களிடமிருந்து தோன்றிய இவ்வமைப்புக்கு எதிரான அமெரிக்காவினால் நிலைப்பாடு தமிழ் மக்கள் மீது எந்தளவுக்கு உண்மையான கரிசனையாக அமையும் என்பது சந்தேசத்துக்குரியது.

இவற்றை விட இலங்கை சீனா நட்புறவு உட்பட நா முன்னரே குறிப்பிடப்பட்டிருக்கும் பல காரணங்களும், இலங்கையை தமது ஆசியாவின் அபிவிருத்தித்திட்டத் தேவைகளுக்கு பயன்படுத்த வேண்டிய அமெரிக்காவின் நோக்கமும் என்ற பல விடயங்களையும் கவனத்தில் கொண்டு பார்க்கும் போது தனது குள்ளநரித்தன அரசியலுக்கு இலங்கை விவகாரம் சாதாரணமான ஒரு துருப்புச்சீட்டே. இது தமிழ் மக்களை திருப்திப்படுத்தும் என்பதில் நம்பிக்கை இல்லை எனலாம்.

அநாமிக்கா

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே தமிழ்மக்களின் தன்மானத்தைக் காப்பாற்ற வேண்டும்

இலங்கை அரசியலில் மட்டுமல்ல இன்று சர்வதேச அரசியலிலும் மார்ச் மாத ஜெனிவா மனித உரிமை கூட்டத்தொடர் முக்கிய கவனிப்பை பெற்றிருக்கிறது. மனித உரிமை விவகாரங்களில் அதிகளவில் கரிசனை காட்டாத பல நாடுகளின் அரசியல் விவகாரங்கள் இதில் கலந்தாலோசிக்கப்படும். அந்நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரமும் உள்ளடக்கப்பட்டுள்ளமை இலங்கையைப் பொறுத்தவரையில் முக்கியமான விடயம்தான்.

1987 முதல் 2009 வரையிலான 22வருடகால விடுதலைப் போராட்ட வரலாறாக இருந்தாலும் சரி, அல்லது 1948ஆம் ஆண்டுக்கு பின்னரான 55 வருடங்களுக்கு மேற்பட்ட தமிழ்மக்கள் சார்ந்த அரசியல் வரலாறாக இருந்தாலும் சரி இலங்கையின் பௌத்த மத அரசியலாளர்கள் தமிழ்மக்கள் தொடர்பிலான சாதக கொள்கைகளை எப்போதுமே கொண்டிருக்கவில்லை. இங்கு பெரும்பான்மை அரசியல் பலத்தை கொண்டிருக்கும் சிங்கள மக்கள் தவிர்ந்த ஏனைய தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தமது கொள்கைகள், சுயநிர்ணய உரிமைகள் தொடர்பில் அரசுக்கு எதிரான எதிர்ப்பு மனப்பான்மையையே இது வரை கடைப்பிடித்து வந்திருக்கின்றனர்.

பலநேரங்களில் அமைதியான அணுகுமுறை கோரிக்கைகள் பலனற்ற சூழலில் அவை எதிர்ப்பு குரலாக ஓங்கி ஒலிக்கப்பட்ட நிலையில் அத்தகையவர்களின் குரல்வளைகள் நசுக்கப்பட்டமையை வரலாறு கூறும். இந்நிலையில் பெரும்பான்மை அரசாங்கத்திடமிருந்து தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள முஸ்லிம் சமூகம் முயற்சிகள் எடுத்திருந்த போதும் அவை கைகூடாத நிலையில் மென்போக்கான அணுகுமுறையை இப்போது பின்பற்றி வருகின்றனர். அரசியல்வாதிகளாயினும் சரி, மக்களாயினும் சரி முஸ்லிம் சமூகத்தவர்கள்தமது அரசியல் இறைமை தொடர்பில் இப்போது பெருமளவில் அக்கறை கொள்வதில்லை. மாறாக ஏதோ முரண்படாமல் வாழ்ந்தால் சரி என்ற நிலைப்பாட்டுக்குள் வாழப்பழகிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் வரலாற்றில் பல துரோகங்களை எதிர்கொண்டவர்களாகவும், போரியல் சுமைகளை சுமந்துகொண்டு வாழத் திராணியற்றவர்களாகவும் இருப்பவர்கள் தமிழ்மக்கள் என்பது உண்மையே. இதனால் தான் தமிழ் மக்களது பிரச்சினைகள் இன்று சர்வதேச ரீதியில் கவனிப்பை பெற்றிருக்கிறது. சர்வதேச அரசியல் அரங்குக்குள் உள்வாங்கப்பட்ட ஒரு விடயமாக மாறியிருக்கிறது. இதனால் சர்வதேச சமூகத்தால் இலங்கைத் தமிழ் மக்களுக்கான தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்ற ஒரு நம்பிக்கைகூட இப்போது எழுந்துள்ளது. ஆனால் இலங்கையில் தமிழ் மக்களுக்கான தலைமைகளாக இன்று இருப்பது த.தே.கூட்டமைப்பு ஒன்றே. ஆகவே தமிழ்மக்களின் தன்மானம் தொடர்பில் முழுப்பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இவர்களே.

எமது நாட்டில் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பகுதியாக வடக்கு, கிழக்கு மற்றும்மலையகம்காணப்படுகிறது. இதில் தமிழ் மக்கள் பலம் அதிகமாக இருப்பது வடமாகாணத்தில் மட்டுமே. கிழக்கில் மாகாணசபை அதிகாரம் தமிழர்களிடம் இல்லாத நிலையில் வடமாகாணசபை தமிழர்களின் பலத்தைக் கொண்டுள்ளது. இந்நிலையில் ஜெனிவா மாநாட்டின் தீர்மானத்தில் வடமாகாணசபையின் பொறுப்பும் அடங்கியுள்ளது.

ஜெனீவா தீர்மானமானது இனப்படுகொலை தொடர்பிலானதும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலானதுமாகும். சர்வதேச விசாரணை அல்லது உள்நாட்டிலேயே தீர்வைப் பெற்றுக்கொள்வது என்ற ஏதோ ஒரு அணுகுமுறை தான் தீர்வாக அமையப்போகிறது. பிரேரிக்கப்படப் போகிறது. மேலும் இதில் அமெரிக்கா கூடிய ஆதிக்கத்தை செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவும் இலங்கை மீதான தீர்வுத்திட்டத்தில் முக்கிய நாடாக பங்குவகிக்கும் என்றும் நம்பவேண்டியுள்ளது.

இப்படியான சூழலில் தமிழ்மக்களின் தன்மானத்தை காப்பாற்றுபவர்கள் யார்? என்ற கேள்வி எழுகிறது. நிச்சயமாக அமெரிக்காவோ, இந்தியாவோ தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொடுக்க மாட்டாது. ஆனபடியால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பே இப்பாரிய பொறுப்பை சிரமேற்கவேண்டும்.




ஜெனீவா பிரேரணை வடக்கு மாகாணம் பற்றியே கூறுகிறது. கிழக்கு மாகாணம் பற்றியோ மலையகம் பற்றியோ கூறவில்லை. நில ஆக்கிரமிப்பு, தொழில் வழங்கலில் சமவாய்ப்பின்மை, இன விகிதாசாரத்தை கட்டுப்படுத்தல், சலுகைகள், உரிமைகள் வழங்குவதில் பாராபட்சம் என்று வடக்கில் நிலவக்கூடிய பிரச்சினைகள் யாவும் ஏனைய இடங்களில் வாழும் தமிழ்மக்களிடமும் காணப்படுகிறது. ஆனால் உரிமைக்கான எதிர்ப்புக்குரல் வடக்கிலிருந்து மாத்திரமே ஓங்கி ஒலிக்கின்றது. இதன்மூலம் த.தே.கூட்டமைப்பின் பணியும் உணர்த்தப்படுகின்றது.

இங்குள்ள அரசியல் நிலமைகளைப் பார்த்தால் தமிழ் மக்களுக்கான நன்மைகளைப் பெற்றுக்கொடுக்க த.தே.கூட்டமைப்பு முயன்று வருகிறது என்றுதான் கூறவேண்டும். வடமாகாணசபையில் தமக்கான அரசியல் தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொள்ள பலப்படுத்த பெரும்பாலான மக்களும் தமது பங்களிப்பை மிகச்சரியாகச் செய்திருந்தனர். இதனால்தான் ஆயுதம் ஏந்திப் போராடிய உறுப்பினர்களைக்கூட ஒரே தலைமையில் இணைய ஆதரவு வழங்கியிருந்தனர். இதன்படியாக உருவாகிய வடமாகாணசபையின் ஆட்சி அதிகாரத்தை எதிர்காலத்திலும் தொடர்ந்து பலப்படுத்த வேண்டியுள்ளது. சர்வதேச நாடுகள்தான் இலங்கைத் தமிழ்மக்களுக்கான தீர்வுத்திட்டத்தை வழங்கவேண்டும். சர்வதேச விசாரணை மூலமாகவே இனப்படுகொலை நில அபகரிப்பு போன்ற விடயங்கள் ஆராயப்படும் என்ற கோணத்தில் சர்வதேச சமூகத்தை நாம் தொடர்ந்தும் நம்பியிருப்பது மடமை என்றே கூறவேண்டும்.

சர்வதேச சமூகத்தில் அங்கம் வகிக்கும் எந்தவொரு நாடும் தனது எல்லைக்குட்பட்ட அரசியலில் அதிகாரத்தையே முதன்மையாகக் கொள்ளும். தமது பாதுகாப்பில் நின்றுகொண்டுதான் எந்த பிரச்சினையையும் அணுகும். இலங்கை விவகாரத்திலும் அதுவே நடைபெறப்போகிறது. ஏனென்றால் சர்வதேச விசாரணை என்று வந்தால் போருக்கு உதவிய நாடுகள் பற்றிய விசாரணையும் முக்கியம் பெறும். அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகள் விசாரணைக்கு முகங்கொடுக்கும். இதனால் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டுவரத்துடிக்கும் நாடுகளான இவை தமது தலையில் தாமே மண்ணை அள்ளிப்போடும் செயலை ஒருபோதும் செய்ய எத்தணிக்காது. உலக வரைபடத்தில் சிறுபுள்ளியாக இருக்கும் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் தமது சுயகௌரவத்துக்கு இழுக்கு ஏற்பட எந்த நாடும் ஆசைப்படாது.

மற்றும் அமெரிக்கா ஆசியக்கடற்பரப்பில் தனது பாதுகாப்பு தேவை, பொருளாதாரத்தேவை போன்றவற்றுக்கு இலங்கையை மையமாகக்கொண்டிருக்கிறது. இதனால் ஒரேடியாக இலங்கையை தூக்கி எறிய முடியாது. அதுபோல இந்தியாவும் சர்வதேச நாடுகள் இலங்கை விடயத்தில் தலையிட்டு தீர்வை வழங்குவதை பார்த்துக்கொண்டிருக்காது. ஆசியாவில் தன்னை வல்லரசாக நிலைநிறுத்த முயலும் இந்தியா தன்னை விட பலம்பொருந்திய இன்னொரு நாடு தனது அண்டைநாட்டில் தலையிட்டு தீர்வு வழங்குவதை வேடிக்கை பார்க்காது. எனினும் உள்நாட்டு தேர்தலுக்கு முகம் கொடுக்க தயாராகிக் கொண்டிருக்கும் சூழலில் எல்லா பக்க நன்மை தீமைகளையும் ஆராய்ந்தே முடிவுகளை எடுக்க முற்படும். ஆகவே இலங்கை மீதான தீர்மான விடயத்தில் நெகிழ்வுத்தன்மையைத்தான் இந்தியா கடைப்பிடிக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல்வாதிகள் தமிழ்மக்களது விவகாரம் தொடர்பில் இந்தியா தனது சாதகமான பங்களிப்பை வழங்கவேண்டும். இந்தியாவுக்கும் தமிழ்மக்களுக்கும் இடையிலான அரசியல் உறவு நீண்டநெடியது. அவர்களுக்கு இதுதொடர்பிலான கடப்பாடு உள்ளது என்றெல்லாம் பேசிவருவது வழமை. ஆனால் தனது நலனுக்கு பங்கம் ஏற்படாத வகையில் தான் இந்தியா இதுவரையிலும் தமிழர் விவகாரத்தில் அணுகுமுறைகளைக் கடைப்படித்து வந்திருக்கிறது. ஆகவே இந்திய அரசும் தமிழ்மக்களின் தன்மானத்தை காப்பாற்ற மாட்டார்கள்.

இலங்கையின் உள்நாட்டு அரசியல் நிலையைப் பார்த்தால் இங்கு நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான அரசு மீதான அழுத்தம் உள்நாட்டு அரசியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மை. இப்பொழுதே உள்நாட்டில் சர்வதேச விசாரணைக்கு எதிரான சிங்களமக்களின் எதிர்ப்புக்குரல் அதிகமாக ஒலிக்கத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் சர்வதேச ரீதியில் எடுக்கப்படும் தீர்மானமானது இலங்கையின் சுயகௌரவத்தை பாதிக்கும். இதனை யாரும் அனுமதிக்க மாட்டார்கள். விரும்பமாட்டார்கள். இலங்கை ஜனாதிபதியைப் பொறுத்த வரையில் சுயகௌரவத்தை மிகவும் அதிகமாக நேசிப்பவரும் கூட. இதனால் சர்வதேச அளவில் எடுக்கப்படக்கூடிய தீர்மானங்கள் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு அரசியல் ரீதியாக மட்டுமல்ல பலவகையிலான அச்சுறுத்தல்களையும் காலப்போக்கில் உருவாக்கும்.

சர்வதேச நாடுகள் இலங்கையில் வந்து நின்றுகொண்டு தமிழ்மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க முடியாது. தீர்மானங்களை பரிந்துரை செய்யலாம். அரசுக்கு அறிவுரைகளை வழங்கலாம் அல்லது சிறியளவிலான அச்சுறுத்தலை வழங்கலாம். ஆனால் ஒருநாட்டின் அரசியல் சாசனத்தை மற்றொரு நாடு மதிக்கவேண்டியது அவசியம். பெருமெடுப்பிலான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஒருநாளும் வாய்ப்புக்கள் ஏற்படாது என்றுதான் கூறவேண்டும். மேலும் தமிழ்மக்களை பலிக்கடாக்களாக்குகிற நிலமை இத்தீர்மானங்கள் மூலம் ஏற்படக்கூடாது. அப்படி ஏற்பட்டால் இலங்கைக்குள் வாழ்கின்ற தமிழ் மக்களின் நிலமை கவலைக்குரியதாகவே மாறும். அவர்களது எதிர்காலம், அடுத்த தலைமுறைகளின் இருப்பு, அற்ப சொற்ப உரிமைகளையாவது தக்கவைத்துக்கொள்வதில் ஏற்படும் பிரச்சினைகள் எம்முடன் கூடவேதான் பயணிக்கும்.

ஆகவே எதிர்காலத்தில் இலங்கைமீது நிறைவேற்றப்படும் தீர்மானமாக இருந்தாலும் சரி, அல்லது பரிந்துரையாக இருந்தாலும் சரி அது தமிழ்மக்களுக்கு பாதகமாக அமையாததாக இருந்தால் நல்லது. இலங்கையில் அரசியல்வாதிகள் மட்டுமல்ல மக்களும் இனவாதம் கொண்டவர்களாகவே உள்ளனர்.


அப்படியானவர்களின் ஆட்சியின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள தமிழ்மக்களின் தலைவிதி சர்வதேசத்தால் மாற்றி எழுதப்படும் என்பதில் நம்பிக்கை இல்லை. ஆகவே தமிழ்மக்களின் தன்மானத்தை காப்பவர்களாக என்றும் இருக்கக்கூடிவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் மாத்திரமே.

**நெற்றிப் பொறியன்**

# நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

தங்கள் தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள், குறிப்பாக ஈழத் தமிழர்கள் ஒருங்கிணைந்து, ஜனநாயக முறையில் உருவாக்கியுள்ள அமைப்பு தான் நாடு கடந்த தமிழீழ அரசு (Provisional Transitional Government of Tamil Eelam). அனைத்துலக சட்டமரபு நெறிகளுக்கு அமைவாக இது உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியலில் தமிழர்கள் பங்கு பெறுவது சாத்தியம் அற்றதாகிவிட்டதால், அந்த தீவிற்கு வெளியிலேயே தமிழர்கள் தமது உரிமைகளை நிலைநாட்டுவதற்கான முன்னெடுப்பு முயற்சிகள் இவ்வமைப்பு மூலம் நடைபெறுகின்றன. பன்னாட்டு அமைப்பாக நிறுவப்பட்டுள்ள நாடு கடந்த தமிழீழ அரசில் ஐக்கிய அமெரிக்கா, கனடா, நோர்வே, ஐக்கிய இராச்சியம் உட்படப் பல நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் உறுப்பினராக உள்ளனர். 100க்கு மேற்பட்ட நாட்டினர் அங்கம் வகிக்கின்றனர். இதன் தலைவராக விசுவநாதன் உருத்திரகுமாரன் உள்ளார். இவ்வமைப்பின் அங்கத்தவர்கள் மே 2010இல் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இப்போது இவ்வமைப்பின் பணிகள் நடைபெற்று வருகின்றன.




ஈழத் தமிழர்களின் சமூக இருப்பு என்பது அவர்களின் அரசியல், பண்பாடு, பொருளாதாரம், வாழ்வியல் ஆகியவற்றின் தனித்துவத்தினை தக்கவைப்பதிலும் உலகின் ஏனைய சமூகங்களுடன் இணைந்தும் இணையாகவும் செழுமைப்படுத்துவதிலுமேயே தங்கியுள்ளது. இதனை சிறப்பாக அடைவதற்கும் அச்சுறுத்தல்களினை ஏற்படுத்தக்கூடிய காரணிகளினைக் கட்டுப்படுத்தி வெற்றி கொள்வதற்கும் ஏதுவாக ஒரு உறுதியானதும் தன்னாட்சி உரிமையினைக் கொண்டதுமான அரசியல் கட்டமைப்பு அவசியமாகவுள்ளது. இது 1976ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டை தீர்மானமாக வடிவம்பெற்று 1977 ஆம் ஆண்டில் மக்கள் ஆணையாக உறுதிப்படுத்தப்பட்டது.

1985ஆம் ஆண்டு திம்பு கோட்பாடுகள் இதற்கு மேலும் வலுச்சேர்த்தது. இலங்கைத் தீவுக்குள் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக வளர்த்து எடுக்கப்பட்டு இன்றைய நிலையில் கூர்மையடைந்துள்ள இராணுவ மயப்படுத்தப்பட்ட அரசியல் கட்டமைப்பும், பௌத்த சிங்கள மேலாதிக்க சமூகத்தினை சார்ந்த அரசியலமைப்பும் அதன் அடிப்படையான சட்டங்களும் ஏனைய தேசிய இனங்களின் அடிப்படை உரிமைகளினையும் நல்வாழ்வினையும் மறுத்துள்ளது. இவை தமிழ் மக்களினதும் பௌத்த சிங்களவர் அல்லாத ஏனைய இனங்களினதும் அரசியல் தனித்துவத்திற்கும் சமூக இருப்புக்கும் சுதந்திரமான பண்பாட்டு வளர்ச்சிக்கும் மிகப்பெரும் தடைகளாக விளங்குகின்றன.

அத்துடன், தமிழ் மக்கள் தங்கள் அரசியல் வேட்கையினை சுதந்திரமாக தெரிவிப்பதற்கும் அதற்காக குரல் எழுப்பி போராடுவதற்கும் இலங்கைத் தீவின் உள்நாட்டுச் சூழல் மிகப்பெரும் தடையாகவும் அச்சுறுத்தலாகவும் உள்ளது. தீவில் வாழும் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் ஒருவகையில் அரசியல் கைதிகளாகவும், உரிமைகளுக்காக போராடுவதில் இருந்து தடுக்கப்பட்டவர்களாகவும் அடிமைகளாக வாழவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். அதேவேளையில் சிங்கள அரசின் தலைவர்களும், கொள்கை வகுப்பாளர்களும், இராஜதந்திரிகளும் இராணுவத் தளபதிகளும் இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு எது வித பிரச்சினையும் இல்லை என்றும் அரசில் தீர்வு என்பது அவசியமற்றது எனவும் உள்நாட்டிலும் அனைத்துலக மட்டங்களிலும் பிரகடனம் செய்து வருகின்றனர். இவற்றினை எல்லாம் எதிர்கொண்டு தமிழ் மக்களின் அரசியல் தன்னாட்சி உரிமையினை வென்று எடுப்பதற்கு வேண்டிய பணிகளினை பல்வேறுபட்ட அணுகுமுறைகளுக்கு ஊடாக முன்னெடுக்க வேண்டிய பெரும் கடமை புலம்பெயர் தமிழ் மக்களின் கைகளில் வீழ்ந்துள்ளது. அதனை முன்னெடுப்பதற்கான ஒருங்கிணைக்கப்பட்டதும் மக்களின் ஆணையினைப் பெற்றதுமான ஒரு கட்டமைப்பின் அவசியம் உணரப்பட்டதால் இது உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இலங்கை அரசின் போர்க் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் ஐ.நா.விலும், ஐரோப்பிய நாடுகளிலும் விவாதங்களுக்கு வந்துள்ளன. உலகப் புகழ் பெற்ற "டப்ளின் மக்கள் நிரந்தர தீர்ப்பாயம்" இலங்கை ஜனாதிபதியைப் போர்க் குற்றவாளியாக அறிவித்திருக்கிறது.

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் சர்வதேச ரீதியிலான அழுத்தத்தை இலங்கைமீது வழங்கி வருகின்றன. ஆனால் இவ்வருடத்தின் ஆரம்பத்தில் ஐ.நாவின் உள்ளகத் தகவலின் படி இலங்கைக்குச் சார்பாக 15 நாடுகள் எதிராக 12 நாடுகள் நடுநிலையுடன் 19 நாடுகள் இருப்பதாகவும் தகவல்கள் கசிந்திருந்தன. இதனை அடிப்படையாக வைத்து இலங்கையரசு உலக நாடுகள் பலவற்றிடமும் குறிப்பாக நடுநிலைத் தன்மையுடன் இருக்கக் கூடிய 19 நாடுகளிடமும் தன் முகவரை அனுப்பியுள்ளதுடன் எதிராக உள்ள 12 நாடுகளிடமும் தன் நியாயத்தை வழமையான முறையில் கூறிவருகிறது.

சர்வதேச அரசியல் தளத்தில் இந்த பிரச்சினைகளை நகர்த்திச் செல்ல நாடு கடந்த தமிழீழ அரசு தனது முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்திருந்தநிலையில்புலம்பெயர்தமிழர் அமைப்புக்கள்பலமார்ச்மாதக்கூட்டத் தொடர் தொடர்பில் பாரிய வேலைத் திட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. இவற்றை முறியடிக்க சில அரச தரப்புடன் இயங்கும் தமிழர் தரப்புக்களும் முயன்று வருவதாக தெரிகிறது. ஏற்கனவே இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாயமாநாட்டில் பிரிட்டன் கலந்துகொள்ள தயாரான நிலையில் அவ்வரசாங்கத்தின் இலங்கைமீதான கொள்கை நிலைப்பாட்டில் ஓர் இறுக்கமான மாற்றம் அவசியம் என்பதனை வலியுறுத்தும் பொருட்டு இக் கையெழுத்து வேட்டை நடத்தியிருந்தது. அத்துடன்பொதுநலவாயஉச்சிமாநாட்டில் சிறிலங்கா தொடர்பில் இறுக்கமான நிலைப்பாட்டினை பிரித்தானியா எடுப்பதற்கு ஓரளவு இது அழுத்தத்தையும் வழங்கியிருந்தது.

அத்துடன் வருகின்ற மார்ச் 2014இல் கூடும் ஐநா மனித உரிமை மன்றத்தில் இலங்கை தொடர்பான தீர்மானம் குறித்து அரசுகளும் புலம்பெயர் வாழ் தமிழர்களும் தங்களது செயல் திட்டங்களை வகுக்க தொடங்கியுள்ளனர். ஆனால்மிகஅண்மையில்உதயமாகியுள்ள பெரும்பாலான புலம்பெயர் வாழ் தமிழ் செயற்பாட்டாளர்கள், தமிழ் தேசிய அரசியல் பிரச்சினையை, தங்களது சுயநலத்தை மனதில் கொண்டு, தமது தனிப்பட்ட செல்வாக்கை தேடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது ஒருபுறமிருக்க கடந்த நான்காம் திகதி கொண்டாடப்பட்ட இலங்கையின் சுதந்திரதின விழாவினை சர்வதேச நாடுகளில் வாழும் தமிழ்மக்கள் கறுப்பநாளாகவே அனுஷ்டித்தனர். இலங்கையில் சிலவிடங்களில் ஆங்காங்கே கறுப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டன. இலண்டனில் பிரித்தானிய தமிழ் இளையோர் அமைப்பால் இலங்கையின் உயர்ஸ்தானியர் காரியாலயத்துக்கு முன்னால் போராட்டம் நடத்தப்பட்டது. எந்த ஒரு இலங்கை அரச அதிபரும் தமிழ்மக்களுக்கு சார்பாகநடந்து கொண்டதாக சரித்திரம் இல்லை மாறாக தமிழின அழிப்பை தான் முக்கிய தொழிலாக பார்த்து வந்துள்ளார்கள். இனவழிப்பின் உச்சகட்டம் தான் முள்ளிவாய்க்கால். இதற்கு பின்பும் நாம் அவர்களிடம் உரிமையை கேட்பது முட்டாள்தனம் ஆதலால் தான் போராட்டதினை பயன்படுத்தி இலங்கையிடம் கோரிக்கை வைக்காமல் மாறாக நாம் ஈழத்தமிழர் என்றும் இலங்கையரல்ல என்பதினை உரக்க கூறினார்கள். அதேபோல இலங்கை அரசின் யாப்பினை நடுவீதியில் வைத்து எரித்து அவர்களின் எதிர்ப்பினை காட்டினார்கள்.

அதேபோல பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்பு குழுவினர் மற்றும் இளையோர் அமைப்பும் சேர்ந்து பிரித்தானிய பிரதமர் அவர்களின் வாசல்தளத்திற்கு முன்னாலும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. அங்கு பிரித்தானிய அரசு செய்த தவறினை திருத்தி கொள்ளவேண்டும், தமிழ் மக்களுக்கு உரிமையினை மறுபடியும் தரவேண்டும், தமிழீழத்துக்காண பொது வாக்கெடுப்பு என்று பல கோரிக்கைகள் வைக்கப்பட்டது. இதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் கலந்துகொண்டு உரைகள் நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதைவிட ஜேர்மனி பிரேமேன் நகரில் நடைபெற்ற மக்கள் தீர்பாயத்தின் தீர்ப்பு சென்ற வாரம் ஜேர்மன் வெளிவிவகார அமைச்சின் இலங்கைக்குப் பொறுப்பான அதிகாரியிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. மக்கள் தீர்ப்பாயத்தில் உலகின் மிக முக்கிய மனித உரிமையாளார்கள், சிந்தனையாளார்கள், செயல்பாட்டாளர்கள் என பல்வேறு நாடுகளில் இருந்து நீதிபதிகளாக கலந்து கொண்டவர்கள் இனப்படுகொலைக்கான சட்டங்கள், அளவுகோள்கள் என அனைத்து தரப்பிலும் விசாரணை நடாத்தி ஆழமாக ஆராய்ந்த பின்னர் சிறிலங்காவில் ஈழத்தமிழர்களுக்கு நடந்தது நடப்பது ஓர் 'இனப்படுகொலை' என அறிவித்திருக்கிறார்கள். இது முக்கியமானது. வரலாற்று சிறப்பு மிக்கது.

இத்தீர்ப்பை தீர்ப்பாயத்தில் நீதிபதியாக கலந்துகொண்ட ஐ.நாவின் துணை பொதுச்செயலாளர் பொறுப்பில் இருந்த திரு. டெனிஸ் ஹாலிடே அவர்களே பெர்லினில் அமைந்திருக்கும் ஜேர்மன் வெளிவிவகார அமைச்சிடம் கையளித்தார். இச்சந்திப்பில்திரு.டெனிஸ் ஹாலிடே அவர்கள் ஈழத்தமிழர்கள் நிலமை குறித்து நீண்ட நேரம் ஆழமாக எடுத்துரைத்ததோடு எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் ஐ.நா மனிதவுரிமை பேரவை ஒன்றுகூடும் வேளையில் இலங்கையில் நடக்கும் இன அழிப்புக்கு அனைத்துலக சுயாதீன விசாரணை வலியுறுத்தப்பட வேண்டும்என்றும் அதற்கு ஜேர்மன் அரசாங்கம் முதன்மையாக நீதியின் அடிப்படையில் செயற்பட வேண்டும் என்றும் எடுத்துரைத்தார் .

இப்படியாக பலநாடுகளிடமிருந்தும் பல விதமாக கருத்துக்கள் இலங்கை விவகாரம் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ்மக்கள் பெரும்பாலும் ஒரே விதமான கருத்துக்களையே கொண்டிருக்கின்றனர். இலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிராக நடைபெற்ற மனிதஉரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திடம் பொறுப்புக்கூறவேண்டும். இலங்கையில் எஞ்சியுள்ள மக்கள் அரசியல் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவர்களது அரசியல் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும். காணாமல் போனவர்கள் தொடர்பிலான விசாரணைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்பதாகவே அவை அமைந்துள்ளன. உள்நாட்டுக்குள் அரசாங்கத்தால் தீர்வு நியாயமான முறையில் வழங்கப்படாது என்பதனாலேயே சர்வதேச அரசாங்கங்கங்கள் மனிதாபிமான முறையில் இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்கின்றனர். ஆகவே எது எப்படியாக இருந்தாலும் சரி இலங்கை மக்களின் விவகாரம் தொடர்பில் புலம்பெயர் தமிழ்மக்கள் எப்போதும் குரல் எழுப்பிக்கொண்டிருப்பார்கள். இதற்கு உறுதுணையாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இருக்கும் என்பது மட்டும் உண்மை.


மறவன்

# மவுசாகலை நீர்த்தேக்க திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலை என்ன?

நீர் மின்சார உற்பத்திக்காக 1961ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தால் மவுசாகலை நீர்தேக்கம் அமைத்து நீர் சேகரிப்பை மேற்கொள்ள திட்டமிட்டு 95 ஆயிரம் ஹெக்டேயர் காணியை உள்ளடக்கிய நீர்தேக்கத்தை அமைக்க சகல வளங்களையும் கொண்ட பல தேயிலை தோட்டங்கள் உள்ளடங்களாக இலங்கையின் மின்சார தேவைக்கென மவுசாகலை நீர்தேக்கம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இதனால் நாட்டிற்கு அன்னிய செலவாணியை பெற்றுகொடுத்த தேயிலை தோட்டங்களான சின்ன கங்குவத்தை தோட்டம், கங்குவத்தை தோட்டமும் தேயிலை தொழிற்சாலை மற்றும் தோட்ட குடியிருப்புடன் முழுமையான தோட்டமும் கிராப்பு தோட்டம் அதன் தொழிற்சாலை, பாடசாலை, குடியிருப்புகள், மற்றும் வண்ணியன் தோட்டம் அதன் தேயிலை தொழிற்சாலை பாடசாலை, குடியிருப்புகள் வக்கா தோட்டம் முழுமையாக குடியிருப்புகள் மற்றும் அதன் தொழிற்சாலை, முகாமையாளர் இல்லம், மொக்கா தோட்டம் அதன் குடியிருப்புக்கள், பெரிய மஸ்கெலியா அதன் தேயிலை தொழிற்சாலை பாடசாலை, குடியிருப்புகள் மறே தோட்டம் அதன் குடியிருப்புக்கள், தொழிற்சாலை, பொடியன் தோட்டம் அதன் குடியிருப்புக்கள், தொழிற்சாலைபோன்றன நீரில் முழ்கடிக்கப்பட்டன.

இவைதவிர லக்சபான தோட்டம் அதன் தேயிலை தொழிற்சாலை தொழிலாளர் குடியிருப்புக்கள், மொக்கா தோட்ட தேயிலை தொழிற்சாலை தொழிலாளர் குடியிருப்புக்கள் போன்றனவும் நீரில் முழ்கடிக்கப்பட்டன. இவற்றில் லக்சபான தோட்டம் அதன் தேயிலை தொழிற்சாலை தொழிலாளர் குடியிருப்புக்கள், மொக்கா தோட்ட தேயிலை தொழிற்சாலை தொழிலாளர் குடியிருப்புக்கள், ரக்காடு தோட்ட தொழிலாளர் குடியிருப்புக்கள், முகாமையாளர் இல்லம், மற்றும் தேயிலை தொழிற்சாலை, அக்கரை தோட்டம் முழுமையாக நீரில் மூழ்கடிக்கப்பட்டன. காட்டு மஸ்கெலியா தோட்ட தேயிலை செடிகள் தோத்தெல்லா தோட்ட குடியிருப்புக்கள் என பல தோட்ட காணிகளின் மூலம் நீர்தேக்கம் அமைக்கும்பணி ஆரம்பிக்கப்பட்டது. அக்கால கட்டத்தில் தோட்டங்கள் யாவும் வெள்ளையர்களின் வசமிருந்ததால் அங்கு பணியாற்றிய ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் தொழிற்சாலை தொழிலாளர்கள் வேலையை இழக்கநேரிட்டது.



இதனால் ஒரு சிலர் தென்னிந்தியாவிற்கு சென்றனர். ஒரு சிலர் ஏனைய தோட்டங்களிற்கு பணிபுரிய சென்றனர். எஞ்சியவர்கள் எங்கும் செல்லமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர். இந்த நீர்தேக்கம் அமைக்கபட்டதால் 18 வணக்கஸ்தலங்கள் நீரில் மூழ்கடிக்கப்பட்டன. இதில் கிறிஸ்தவ, முஸ்லீம், விகாரையும் அடங்கும். அதே போல் தோட்ட பாடசாலைகளும் 3 நகர பாடசாலைகளும், 2 சினிமா கொட்டகைகளும் 3 நகரங்களும் முற்றாக நீரில் மூழ்கடிக்கப்பட்டன. இதிலும் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு காட்டுமஸ்கெலிய, பெரிய நடுத்தோட்டமலை திட்டு பகுதியில் வர்த்தக நிலையங்கள் அமைக்கவும், குடியிருப்புகள் அமைக்கவும் வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள் அமைக்கவும் ஒதுக்கப்பட்ட காணிகளையே வழங்கினர்.



இதனால் 1969ஆம் ஆண்டு நீர்தேக்கத்தின்நீர்மட்டம்ஒரேநாள்பெய்த கடும் மழையால் நிரம்பஆரம்பித்தது. இதனால் பலர் தங்களது உடமைகளை விட்டு விட்டு வந்தும் உள்ளனர். ஒதுக்குபுறமான இடத்தில் பெயரளவில் புதிய நகரம் என்று அப்போதைய வியாபாரிகள் தங்கள் வசதிக்கேற்ப வர்த்தக நிலையங்களினை கட்டிக்கொண்டனர். அரசாங்கம் நட்டஈடு வழங்கிய போதும் ஒரு சிலருக்கே அவ்வாறான நட்டஈடு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதே போல் சொந்த இடமாக ஒரு சிலருக்கு வழங்கியுள்ள போதும் 99 வருடகுத்தகைக்கும் காணி வழங்கியும் உள்ளனர். எது எப்படியாயினும் நகர் அமைய வேண்டிய இடம்தற்போது உள்ள நல்லதண்ணீர், அட்டன் பெருந்தெரு இருபகுதியிலும் நவீன முறையில் அரசாங்கமே எதிர்கால அபிவிருத்தியை கருத்தில் கொண்டு அமைத்து கொடுத்து இருக்கவேண்டும். ஒரு உதாரணம் மேல் கொத்மலை நீர்தேக்கம் காரணமாக புதிய மனைகள், புதிய வீதிகள், புதிய நகருக்கான பணிகள் விரிவாக செய்துள்ளனர். ஆனால் மஸ்கெலியா கங்குவத்தை நகர் இரண்டிலும் இருந்த ஆலயம், விகாரை, கத்தோலிக்க ஆலயம், இஸ்லாமிய பள்ளிவாசல் அவற்றில் சிவனடிபாதமலைக்கு வரும் யாத்திரிகள் இலட்ச கணக்கானோர் ஒரு நாள் தங்கி செல்வார்கள். அவ்வாறு அவர்கள் தங்கி செல்வதனால் வியாபாரிகள் நன்மை அடைந்தனர்.



தற்போது நகர் ஒருபுறம் வீதி ஒரு புறம் வியாபாரிகள் வியாபாரம் இல்லாது உள்ளனர். மேலும் இலட்சக்கணக்கான யாத்திரிகள் வந்தால் நல்லதண்ணி நகரில் தங்கவோ, தரித்து நிற்கவோ இடமில்லை. இது திட்டமிட்டு செய்த சதியெனபலவியாபாரிகள்தெரிவிக்கின்றனர். நல்லதண்ணீர் நகரில் உள்ள அனைத்து வர்த்தக ஸ்தாபனங்களையும் பெரும்பான்மையினர் மட்டுமே உரித்தாக வைத்து கொண்டுள்ளனர். இலட்சக்கணக்கானோர் வந்தால் தங்கி இருந்து சுவாமியை தரிசிக்க முடியாத நிலையில் திரும்பிவிடுகின்றனர். இதற்கான புதிய நடைமுறை ஒன்றை ஏற்படுத்த நகர அபிவிருத்தி அமைச்சு முன்வந்து மேலும் இந்த பிரதான வீதியில் சுமார் 800 வர்த்தக நிலையங்கள் தரிப்பிடங்கள் மடங்கள் பல அமைக்க முன்வரவேண்டும்.

கடந்த வருடம் பெய்த கடும் மழை காரணமாக மவுசாகலை நீர்தேக்க வான்கதவுகள் 3ம் 8 அடி உயரத்திற்கு திறக்கப்பட்டு நீர் வெயியேற்றப்பட்டது. தற்போது 65 அடி வற்றி பழைய நகரில் இருந்த ஆலயம் கம்பீரதோற்றத்துடன் உள்ளது. பள்ளிவாசலின் ஒரு பகுதி புதையுண்டு மேல் தோற்றம் மட்டுமே தெரிகின்றது. பௌத்த விகாரை கட்டிடம் சில விஷமிகள் கற்களை அகற்றியதால் சரிந்து விழுந்துவிட்டமை கண்ணால் காணக் கூடியதாக உள்ளது.

15 ஆண்டுகளுக்கு முன்னரும் இவ்வாறான வரட்சி நிலை தோன்றிய போது நீர் மட்டம் ஆக குறைந்த கொண்டு போன நிலையில் காவடி பாலம் வெளியில் தெரிந்தது. அந்த பாலத்தையும் இரும்புக்காக வெட்டி எடுத்தமை குறிப்பிடதக்கது. அதே போல் பொடியன் தோட்டத்தில் சிவன் ஆலயம் கைவிடப்பட்ட நிலையிலிருந்தது. அந்த ஆலயத்திலிருந்த சிவன் சிலை மற்றும் பெறுமதியான உபகரணங்கள் மீட்டு எடுக்கப்பட்டன. அவற்றில் பெறுமதியான பொருட்கள் மாயமாகி விட சிவன் சிலை மட்டும் நூக்குவத்தை தோட்டத்திலுள்ள ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. யாத்திரிகள் அனைவரும் அந்த வீதியினூடாக சிவனடிபாதமலைக்கு செல்ல வேண்டும். வேறுவழியில்லை. அப்போதே எமது சிவனை தரிசித்து சென்றுள்ளமை வரலாற்றில் பதியபட வேண்டியவை.

மவுசாகலை நீர்தேக்கம் கட்டப்பட்டதால் இந்தியவம்சாவளி பெருந்தோட்ட தொழிலாளர்களும் அப்போதைய வியாபாரிகளும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகையால் இவ்வாறு அசௌகரியத்துக்குள் தள்ளப்பட்ட மக்களுக்கு நல்ல தீர்வுதிட்டம் ஒன்றை அமைக்க தற்போதுள்ள அரசு, அமைச்சர்கள் முன்வர வேண்டும். எது எப்படியாயினும் அன்று 1961 காலப்பகுதிக்கும் 1969 காலப்பகுதிக்கும் இடையில் இந்தியவம்சாவளி மக்கள் ஒரு இலட்சத்து ஐம்பதியரம் பேர் சிதறடிக்க செய்ததால் இந்திய வம்சாவளி மக்களின் பலம் இப்பகுதியில் குறைந்துள்ளது.

கடந்த 42 வருடகாலப்பகுதியில் இவர்கள் இப்பகுதியில் வாழ்ந்திருப்பின் குறைந்தபட்சம் 5 இலட்சம் மக்கள் தொகை அதிகரித்திருக்கும். அதே போல் பாடசாலைகள் மூடப்பட்டதாலும் அவைகள் நீரில் மூழ்கடிக்கப்பட்டதாலும் இடைநடுவில் விலகிய மாணவர்கள் கல்வியை தொடரமுடியாத நிலையும் உருவாகியதாக தெரியவருகின்றது. 95 ஆயிரம் ஹெக்டையர் தேயிலை செடிகள் மூழ்கடிக்கப்பட்டதாலும் மவுசாகலை நீர்தேக்கம் அமைக்கப்பட்டதாலும் இந்தியவம்சாவளி மக்களின் தொகை வீழ்ச்சி கண்டமை வேதனைக்குரிய விடயமாகும். நாட்டுக்கு தேவையான மின்சாரத்தை பெற கட்டப்பட்ட மவுசாகலை நீர்தேக்கம் அமைக்காவிடில் இன்று இந்தியவம்சாவளி மக்கள் செறிந்த பகுதியாக நுவரெலியா மாவட்டம் இருந்திருக்கும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

செ.தி.பெருமாள்

# பிராந்தியச் செய்திகள்

## க.பொ.த சாதாரணதரத்தில் இரண்டாம்மொழிச்சித்தி கட்டாயம்




2019ஆம் ஆண்டு முதல் அரச சேவைக்கு நியனம் பெறும் அனைவரும் க.பொ.த.(சாதாரணம்) தரப் பரீட்சையில் இரண்டாம் மொழியில் சித்தியடைந்திருப்பது கட்டாயமாகுமென பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசகரும மொழிக் கொள்கையை முறையாக நடைமுறைப்படுத்தும் வகையில் இந்த முறைமை கட்டாயப்படுத்தப்படுவதுடன் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் இரண்டாம் மொழி சித்தியடையாதவர்கள் அரச சேவைக்குத் தகைமையில்லாதவர்களாகக் கணிக்கப்படுவர் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கிணங்க தமிழ்மொழி மூலம் க.பொ.த. பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் இரண்டாம் மொழியான சிங்கள மொழியிலும், சிங்கள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவோர் தமிழ் மொழியிலும் சித்தி பெறுவது முக்கியமெனவும் அமைச்சு அறிவித்துள்ளது.

## சுதந்திரதினத்தை முன்னிட்டு பல கைதிகள் விடுதலை




இலங்கையின் 66ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ், யாழ். சிறைச்சாலையில் தண்டப்பணம் செலுத்த முடியாததால் சிறை தண்டனை அனுபவித்து வந்த 9 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறு குற்றங்கள் புரிந்து தண்டப்பணத்தை கட்ட முடியாததனால் சிறைத்தண்டனை பெற்ற ஒரு பெண் கைதி உட்பட 9 கைதிகளை விடுதலை செய்ததாக யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் எச்.எம். பெரேரா தெரிவித்தார் இதேவேளை, கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் வைத்து 1233 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 1194 ஆண்களும் 39 பெண்களும் அடங்குகின்றனர். நாடாளாவிய ரீதியிலுள்ள சிறைச்சாலைகளில் 36சிறைச்சாலைகளிலிருந்தே இந்த கைதிகள் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப்பேச்சாளர் கே.பீ. குலதுங்க தெரிவித்தார்.


## பள்ளத்தில் விழுந்து பேருந்து விபத்து



பஸ் ஒன்று 20 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 26 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மீரிகம - அலவ்வ பகுதியிலிருந்து ராவணா கொட பகுதிக்கு மரண வீடு ஒன்றிற்கு சென்று மீண்டும் வீடு திரும்பும் வேளையில், இன்று அதிகாலை 1 மணியளவில் ரவனஹொட- திம்புலுபத்தன வீதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த அனைவரும் பூண்டுலோயா - மல்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக திம்புள்ளை-பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர்களில் 12பேர் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். சாரதியின் கவனயீனம் காரணமாக விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

## யாழ்.பல்கலை கிளிநொச்சி பீடங்கள் தனி வளாகமாக மாற்றப்படும் - எஸ்.பி திஸ்ஸாநாயக்க



யாழ். பல்கலைகழகத்தின் கிளிநொச்சி பீடங்களான பொறியியல், விவசாய பீடங்கள் தனியான வளாகமாக மாற்றப்படும் என கல்வி உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸ்ஸாநாயக்க தெரிவித்துள்ளார். யாழ். பல்கலைகழகத்தின் கிளிநொச்சி பொறியில் மற்றும் விவசாய பீடங்களின் ஆரம்ப சமய நிகழ்வுகள் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள விவசாய பீட வளாகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ். பல்கலைகழத்தில் பொறியியல் பீடம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது வடக்கு வாழ் மக்களின் நீண்ட நாள் கனவு. இதற்கமைவாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து தரப்பு முயற்சிகளின் பயனாக யாழ். பல்கலைகழத்திற்கான பொறியியல் பீடம் ஆரம்பிப்பதற்கான அனுமதி கிடைத்தது.

இதனையடுத்து கிளிநொச்சி அறிவியல் நகரில் இந்த பீடத்தை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு அதற்கான பணிகளும் முன்னெடுக்கப்பட்டு இவ்வருடம் முதலாவது வருட மாணவர்கள் பொறியியல் பீடத்திற்கு உள்வாங்கப்படவுள்ளனர். அத்தோடு யுத்தத்திற்கு முன்னர் கிளிநொச்சி இயங்கிய விவசாய பீடமும் மீண்டும் கிளிநொச்சி அறிவியல் நகரில் ஆரம்பிக்கப்படுகிறது. 24 வருடங்களின் பின்னர் யாழ் பல்கலைகழகத்தின் விவசாய பீடம் நிரந்தர கட்டிடம் ஒன்றில் இயங்க ஆரம்பித்திருக்கின்றமையும் குறிப்பிட்டத்தக்கது. யாழ் பல்கலைகழகத்தின் கிளிநொச்சி வளாகத்திற்கு 560 ஏக்கர் காணி அறிவியல் நகரில் ஒதுக்கப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## கிளிநொச்சியில் உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு




கடந்த வாரம் கிளிநொச்சி முறிகண்டி அக்கராயன் வீதியில் அமைதிபுரம் காட்டுப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட ஆணின்சடலம் இனம்காணப்பட்டுள்ளது.

கடந்த வாரம் குறித்த காட்டுப்பகுதியில் பொது மக்களால் உருக்குலைந்த நிலையில் இனம்காணப்பட்ட சடலம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து குறித்த இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு கிளிநெச்சி வைத்தியசாலையில் வைத்தோடு மேலதிக விசாரணைகளையும் மேற்கெண்டுவந்தனர். இந்த நிலையில் கடந்த இரண்டாம் திகதி குறித்த சடலம் கேகாலை இக்கிரியகல இல 111 பாடசாலை வீதியை சேர்ந்த 31 வயதுடைய டி.டபிள்யூ. ஜி.ரஞ்சித் பண்டார மாரப்பன எனும் ஒப்பந்தகாருடையது என அவரது மாமனார் அபேய சாந்தகுமார அவர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் ஒரு ஒப்பந்தகார் எனவும் குறித்த பகுதியில் கிரவல் அகழ்வு ஒப்பந்தத்தை பெற்றிருந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது அத்தோடு குறித்த நபர் நஞ்சுருந்தி தற்கொலை கெய்துகெர்ணடதாக சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் சவரூபன் அவர்கள் தனது பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## காணாமல் போனோர் குறித்து தகவல் வழங்குங்கள் - யாழ் அரச அதிபர்



யாழ்.மாவட்டத்தில் காணாமல் போனவர் தொடர்பில் 262 விண்ணப்பங்கள் ஏற்கனவே ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அனுப்பியுள்ள நிலையில் இதுவரை விண்ணப்பங்களை வழங்காதவர்களும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது சாட்சியப்பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது. குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கும் மேலதிக அரச அதிபருக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. அதனையடுத்து யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை 5.30 மணிக்கு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 17 ஆம் திகதிவரை யாழ்.மாவட்டத்தில் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறவுள்ளன. எனவே இதனை நல்லவாய்ப்பாக எடுத்து காணாமற்போனவர்கள் தொடர்பில் அவர்களது உறவினர்கள் சரியான தகவல்களை வழங்கி சாட்சியம் அளிக்கவேண்டும்.

அதன்படி ஏற்கனவே 262 விண்ணப்பங்கள் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. குறித்த விண்ணப்பங்களின் அடிப்படையில் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதற்கமைய 14ஆம் திகதி கோப்பாய் பிரதேச செயலகத்தில் செயலகத்தின் கீழ் உள்ள கிராம சேவகர் பிரிவில் இருந்து 10 பிரிவினருக்கும், 15ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் அதன் கீழ் உள்ள கிராமசேவகர் பிரிவில் இருந்து 13 பிரிவினருக்கும் மேலும் 16,17ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 8 கிராமசேவகர் பிரிவிற்கு மாவட்டச் செயலகத்திலும் விசாரணைகள் நடாத்தப்படவுள்ளன. இதற்கான அறிவுறுத்தல்கள் தொடர்பில் குறித்த பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இதற்கான வேலைத்திட்டங்களை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

இருப்பினும் இதுவரை விண்ணப்பம் அனுப்பாதவர்களும் இங்கு வருகைதந்து தகவல்களை வழங்க முடியும். இந்த நடவடிக்கைகள் காலை 9.30 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறும் . எனவே வருகை தருபவர்கள் தம்மிடம் உள்ள தரவுகளையும் எடுத்து வரவேண்டும் என்றார். யாழ். மாவட்டத்தை சேர்ந்தவர்கள் வெளிமாவட்டங்களில் காணாமல் போயிருப்பினும் பதிவுகளை மேற்கொள்ளலாம் யாழ்.மாவட்டத்தை சேர்ந்தவர்கள் வெளிமாவட்டங்களில் காணாமல் போயிருந்தாலும் அது குறித்த சாட்சியப்பதிவுகளையும் எதிர்வரும் வாரம் மேற்கொள்ளலாம் என யாழ். மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் அதில் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்டு வேறு மாவட்டங்களில் வசித்து வந்தவர்களில் காணாமல் போனவர்கள் இருப்பின் அவர்கள் தொடர்பிலும் குறித்த நாட்களில் வருகைதந்து பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றார்.

## மட்டக்களப்பில் தேசியகொடி எரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் இலங்கைத் தேசியக் கொடி எரிக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸ் குற்றப் புலனாய்வுத் துறையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு- கிரான்குளம் பிரதான வீதியில் புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் ஏற்றப்பட்டிருந்த தேசியக் கொடி நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் தீயிட்டு கொழுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அப்பகுதிக்கு சென்ற படையினர் மற்றும் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், மாவட்ட பொலிஸ் குற்றப் புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




## டாப்ஸி விளையாட்டு வீரருடன் காதல்



ஆடுகளம் டாப்சி பரபரப்பான நடிகை ஆகாததால் பெரிய அளவில் எந்த நடிகர்களுடனும் இணைத்து கிசுகிசுக்களில் சிக்கவில்லை. ஆனால் தற்போது டென்மார்க்கை சேர்ந்த பட்மின்டன் வீரர் மத்தியாஸ் போய் என்பவரை காதலித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

டாப்சியை சந்திக்க அடிக்கடி அவர் மும்பை வருவதாகவும், இருவரும் படப்பிடிப்பு தளத்திலேயே காதலிப்பதாகவும் கூறப்படுகிறது. இதுகுறித்து டாப்சியைக் கேட்டால், "மத்தியாசும், நானும் நல்ல நண்பர்கள். அந்த அடிப்படையிலே அவர் என்னை சந்திக்க வருகிறார். எங்களின் நட்பை, காதல் என களங்கப்படுத்த வேண்டாம்" என கலங்குகிறார். மேலும் காதல் கல்யாணம் இதெல்லாம் தனிப்பட்ட விஷயம். அதனால் வதந்திகளை பரப்பிவிட்டு இமேஜை கெடுக்காதீர்கள் என்றும் கேட்டுக் கொண்டுள்ளாராம்.

## ஏப்ரல் 11இல் கோச்சடையான் வெளியீடு




ரஜினி நடிப்பில் அவரது மகள் சௌந்தர்யா இயக்கத்தில் உருவாகியுள்ள படம் கோச்சடையான். ரஜினி ஜோடியாக பிரபல இந்தி நடிகை தீபிகா படுகோனே நடித்துள்ளார். இவர்களுடன் சரத்குமார், இந்தி நடிகர் ஜாக்கி ஷெரப், ஷோபனா, ருக்மணி, நாசர், ஆதி என ஒரு பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளனர். ரஜினி, அப்பா-மகன் என இரட்டை வேடத்தில் நடித்துள்ளார். ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்துள்ளார்.

முதன்முறையாக ரஜினி 3டி அனிமேஷன் படத்தில் நடித்துள்ளார். இந்தியாவிலேயே முதன்முறையாக அவதார், டின்டின் படங்களுக்கு பயன்படுத்தப்பட்ட மோசன் கேப்டசரிங் தொழில்நுட்பம் கோச்சடையான் படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கோச்சடையான் படம் வரும் ஏப்ரல் 11ஆம் திகதி வெளியாகிறது. இதனை படத்தை தயாரித்த ஈராஸ் நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. உலகம் முழுவதும் 6 ஆயிரம் தியேட்டர்களில் படம் ரிலீஸ் செய்யப்படுகிறது. தமிழ், தெலுங்கு, இந்தி, போஜ்புரி, குஜராத்தி, பெங்காலி, பஞ்சாபி உள்ளிட்ட மொழிகளில் படம் வெளியிடப்படுகிறது.

## த்ரிஷ்யம் ரீமேக்கில் கமல்ஹாசன்



மோகன்லால் - மீனா நடித்த த்ரிஷ்யம் மலையாளத்தில் பட்டி தொட்டி எங்கும் பட்டையை கிளப்பியுள்ளது. இதனால் தமிழ் திரைப்பட உலகின் முன்னணி நடிகர்கள் இந்த படத்தின் தமிழ் ரீ -மேக்கில் நடிக்க ஆர்வம் காட்டினர். இந்நிலையில் தமிழில் இந்த படத்தில் கமல் நடிப்பதாக முடிவாகியுள்ளது. மலையாளத்தில் இயக்கிய ஜீத்து ஜோசப் தான் தமிழிலும் இயக்கப் போகிறார். சமீபத்தில் கமலுடன் இதுகுறித்து பேசிய அவர் ஒரு சில காட்சிகளை தமிழ் இரசிகர்களுக்கு ஏற்ப மாற்றுவது குறித்து விவாதித்தார். முதலில் இந்த படத்தில் நடிப்பதற்கு ரஜினி தான் ஆர்வமாக இருந்தாராம். ஆனால் இதில் உள்ள சில காட்சிகளை தன் இரசிகர்கள் எப்படி ஏற்று கொள்வார்களோ என்ற சந்தேகம் ஏற்பட்டதால் நடிக்க தயங்கி உள்ளார். இதனால் இந்த வாய்ப்பு இப்போது, கமலுக்கு சென்றுள்ளது.

## நான்காவது சர்வதேச அழகி ஐஸ்வர்யாராய்



1994இல் உலக அழகியாக தேர்வு செய்யப்பட்ட ஐஸ்வர்யாராய்க்கு பிறகு எத்தனையோ பேர் உலக அழகிகளாக தேர்வானபோதும் இன்றுவரை ஐஸ்வர்யாராயை மிஞ்சும் அழகியாக யாருமே மக்களால் அங்கீகரிக்கப்பட்டவில்லை. அதனால் உலக அழகி என்றால் அது ஐஸ்வர்யாராயை மட்டுமே என்று கொண்டாடி வருகின்றனர்.

இந்த நிலையில் சமீபத்தில் உலகளவில் அதிக அழகுடைய 30 பெண்களை தேர்வு செய்யும் போட்டியில் இவர் 4ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். முதல் மூன்று இடங்களை மோனிகா பெல்லூசி, கேத்தி அப்தான், ஏஞ்சலினா ஜூலி ஆகியோர் பிடித்துள்ளனர். பொலிவூட் நடிகைகள் பலரது பெயர்களும் இந்த போட்டியில் பங்கேற்றபோதும் ஐஸ்வர்யாராய் தவிர மற்றொரு பொலிவூட் நடிகையான தீபிகா படுகோனேயின் பெயர் 29வது இடத்தை பிடித்துள்ளதாம்.

இதையடுத்து, திருமணத்துக்குப்பிறகும் உலக அளவில் நடத்தப்பட்ட அழகிப்போட்டியில் 4ஆவது இடம் ஐஸ்வர்யாராய்க்கு கிடைத்திருப்பது, இளவட்ட அழகிகள் மத்தியில் பெரிய ஆச்சர்யத்தையும், அதேசமயம் தங்களுக்கு கிடைக்காதது பெரிய அதிர்ச்சியுமாக அமைந்துள்ளதாம். இதற்காக ஐஸ்வர்யாராய் இரசிகர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துள்ளாராம்.

## நீண்ட இடைவெளியின் பின் ராஜ்கிரண்



நீண்ட இடைவெளி பிறகு ராஜ்கிரண் நடிக்கும் படம் சிவப்பு. பல வெற்றிப் படங்களை வழங்கிய முக்தா ஆர்.கோவிந்த் தனது முக்தா எண்டர்டைன்மெண்ட்(பி)லிட்-புன்னகை பூ கீதாவின் எஸ்.ஜி.பிலிம்ஸ்(பி)லிட் பட நிறுவனங்கள் இணைந்து வழங்க கழுகு வெற்றிப் படத்தை இயக்கிய சத்யசிவா இப்படத்தை இயக்குகிறார்.

இதில் ராஜ்கிரண் அழுத்தமான கதாபாத்திரத்தில் கோணார் என்ற வேடமேற்று இருக்கிறார். நாயகனாக நவீன்சந்திரா, கதாநாயகியாக ரூபா மஞ்சரியும் மற்றும் தம்பி ராமய்யா, செல்வா, போஸ்வெங்கட், ஏ.வெங்கடேஷ், அல்வாவாசு, பூராம் ஆகியோர் நடிக்கிறார்கள்.

படம் பற்றி இயக்குனர் சத்யசிவா சிவப்பு என்பது நிறம் மட்டுமல்ல பல உணர்ச்சிகளின் உறைவிடம் தான் சிவப்பு. அதில் கோபம், தோழமை, காதல் வறுமை, புரட்சி என்று நிறைய உணர்வுகளின் உள்ளடக்கம் தான் சிவப்பு நிறம். அதே மாதிரி இந்த திரைக்கதையில் இது அதனையும் இருக்கும் என்று கூறியுள்ளார்.

## மனநல மருத்துவர் வேடத்தில் சந்தானம்



கண்ணா லட்டு தின்ன ஆசையா படத்துக்கு பிறகு சந்தானம் தன்னுடைய தயாரிப்பில் களம் இறங்கும் படம் வாலிப ராஜா. இப்படம் தெலுங்கு படம் ஒன்றை தழுவி எடுக்கப்பட்டு உள்ளது. இதில் சேது, விசாகா, சந்தானம் ஆகியோர் மீண்டும் ஒன்றாக சேர்ந்து நடிக்கின்றனர்.

இந்த படத்தில் சந்தானத்தின் பஞ்ச் டயலொக்குகளுக்கும் விசில் பறக்குமாம். உதாரணத்துக்கு ''உன் காதலை போரடிக்காம பார்த்துக்கிட்டா, அது உன்னை பீர் அடிக்காம பாத்துக்கும், ஒரு டாக்டரால முடியாதது ஒரு குவார்ட்டரால முடியும், மாடு முன்னாடி போனா முட்டும். ஃபிகர் பின்னாடி போனா திட்டும். ஆனா ரெண்டயும் மேய்க்கிறது ரொம்ப கஷ்டம்'' என்பன போன்ற வசனங்கள் தியேட்டர்களில் கை தட்டல்களை வரவழைக்கும் என்கின்றனர் படக்குழுவினர்.

## நஸ்ரியா என் தங்கை – துல்கர் சல்மான்



நஸ்ரியா எனக்கு தங்கச்சி போன்று என்று கூறியுள்ளார் துல்கர் சல்மான். மலையாள நடிகர் மம்முட்டியின் மகன் துல்கர் சல்மான் வாய் மூடி பேசவும் படம் மூலம் தமிழுக்கு வருகிறார். இந்த படத்தில் அவருக்கு ஜோடியாக நஸ்ரியா நஸீம் நடித்து வருகிறார். இந்தப் படத்தில் நடித்ததன் மூலம் இவர்கள் இருவருக்கும் காதல் பற்றிவிட்டது என்ற செய்தி காட்டுத்தீயாய் பரவியது.

இந்நிலையில் துல்கர் நஸ்ரியா பற்றி கூறுகையில் வாய் மூடி பேசவும் மிகவும் ஜாலியான படம் என்பதால் அதில் நடிக்க சம்மதித்தேன். என்னுடன் நடிக்கும் நஸ்ரியா என் அப்பாவுக்கு மகளாக பல படங்களில் நடித்துள்ளார். என் அப்பாவுக்கு மகளாக நடித்துள்ள நஸ்ரியா எனக்கு தங்கச்சி போன்றவர். அவர் எதையுமே பொசிட்டிவாக யோசிப்பவர். அவர் படப்பிடிப்புக்கு வந்தாலே அந்த இடம் ஜாலியாகிவிடும். மேலும் தமிழ் படங்களில் நடிக்க நிறைய வாய்ப்புகள் வருகின்றன. ஆனால் நான் தான் எந்த வாய்ப்பையும் ஏற்றுக்கொள்ளவில்லை. வாய் மூடி பேசவும் ரிலீஸான பிறகே பிற பட வாய்ப்புகளை ஏற்பது பற்றி யோசிப்பேன் என்று கூறியுள்ளார்.

## முருகதாஸ் இயக்கத்தில் விஜயின் அடுத்த படம்




A.R முருகதாஸ் இளைய தளபதி விஜய் இணையும் அடுத்த படத்தின் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது. இந்தப் படத்தை LYCAPRODUCTIONSPVT.LTD தயாரிக்கிறது. இந்தப் படத்திற்கு அனிருத் இசைமைக்கிறார். ஒளிப்பதிவாளர் ஜோர்ஜ் சி வில்லியம்ஸ், படத்தொகுப்பு - ஸ்ரீகர் பிரசாத், கலை இயக்குனர் - லால்குடி இளையராஜா, சண்டைப் பயிற்சி - அனல் அரசு. இப்படத்தை துப்பாக்கி போல் தீபாவளி விருந்தாக வெளியிட திட்டமிட்ட இருக்கிறோம் என்றனர்.

துப்பாக்கி வெற்றிக்குப் பிறகு பிரம்மாண்டமான முறையில் தயாராகும் இப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக சமந்தா நடிக்கிறார். விஜய் - சமந்தா இணைந்து நடிக்கும் முதல் படம் இது.


## பிரபல நடிகர் மர்மமான முறையில் மரணம்

ஒஸ்கர் விருது பெற்ற அமெரிக்க நடிகர் பிலிப் சீமோர் ஹாப்மேன்(வயது 46) மர்மமான முறையில் தனது வீட்டில் இறந்து கிடளந்துள்ளார். அளவுக்கு அதிகமான மாத்திரைக்கள் சாப்பிட்டதால் உயிரிழந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதுதொடர்பாக அந்நாட்டு பொலிசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர், மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த 2005ஆம் ஆண்டு சுயசரிதை(பயோகிராபிக்கல்) என்ற திரைப்படத்தில் நடித்ததற்காக ஹாப்மேன் சிறந்த நடிகர் விருதை பெற்றார், 3 முறை சிறந்த துணை நடிகர் விருதும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கவிதைப் பூங்கா



## எந்தன் தோழி

கொஞ்சும் மொழிச்சொல்லு
செந்தமிழ் வைரக்கல்லு
கோண்டாவில் தெய்வத்தின்
நெற்றிப் புருவவில்லு
கன்னத்தில் குழிவிழுந்த சிரிப்பு
சிறு உதடுகளின் சேர்மானத்தில்
புன்னகை
கிளிக் கண்ணிப்பார்வை
அன்னதாராபேடை நடை
விரல் நகங்களில் மருதாணிக்குடை
அதனுள் கசக்கிப் பிடித்த கைக்குட்டை
நெற்றியில் விழுந்திருக்கும்
சுருள் மயிர் அலை
புடைத்த நெற்றியில் சிறு
கறுத்தப்பொட்டு
குடிதண்ணீர் போத்தலுடனும்
புத்தகங்களுடனும்
கைமூட்டில் கொழுவிவரும் பை
மணிக்கட்டு ஒன்றில் கைக்கடிகாரம்
கௌரி அம்மனிடம் அருள்வேண்டி
ஒரு கைமூட்டின் கீழ் காப்புக்கட்டு
நிதானமான பாதஅசைவு
பக்குவமான பாவாடை தாவணி உடை
கட்டட நிர்மாண மேற்பார்வை
அவள் பாடநெறி
தொழில்நுட்பம் பயிலும் மாணவர்க்கு
அவளும் ஒரு கணினி

ஆ.முல்லைத்திவ்யன்



## சத்தியம் பொய்

காதலிக்கும்போது - நீ
செய்த சத்தியங்கள் பொய்
கலியாண எழுத்தின் போது - நீ
செய்த சத்தியம் பொய்
தாலிகட்டும் போது - நீ
செய்த சத்தியம் பொய்
இப்போதுகூட உன் ஊரவர்க்கு நீ போய்
சொல்வதும் பொய்தானே

சு.தேவகுமார்
செட்டிகுளம்



## தரித்திரம் என்று

புத்தியிழந்து
மனிதகுணம்
பித்தலாட்டம்
ஆடுதடா
தட்டிக்கேட்க
இடமிருந்தும்
தரித்திரம் என்று
தடுக்குதடா

மருதங்கேணியூர்
வே.வே அகிலேஸ்வரன்



## ஊமையாக்கப்பட்ட உண்மைகள்

மன்னாரில் புதைகுழியாம்
மண்டையோடுகள் மீட்பாம்
தொடரும் மர்மங்களுடன்
தொடர்கிறது பத்திரிகைச் செய்தி


விடைதேடும் வினாவாய்
விரிகிறது செய்தி
புதைகுழியின் மர்மமும்
புதைக்கப்பட்டு விட்டதோ?

புதைகுழிகள் ஒன்றும்
புதிதல்ல நமக்கு
மாண்டவர்கள் புதைக்கப்பட்ட
தோண்டப்படும் இடங்களே புதிது

உலகம் அறியாத
உண்மைகள் பல
இப்படி எத்தனையோ புதைகுழிக்குள்
இன்னும் வெளிவராத உண்மைகளாய்

புதைகுழிகள் மீட்கப்பட்டாலும்
புதையுண்டு போன உண்மைகள்
என்றும் இருளுக்குள்
மறைக்கப்பட்டவையாகவே மாற்றப்படும்

வேல்மகள்
புளியம்பொக்கனை



## சுதந்திரம்

ஆயிரம்கோடி விளக்குகள்
ஒளிவீசி என்ன பயன்
தமிழர்களின் மனங்கள்
நீண்ட காலங்களாய்
இருண்டுதான் கிடக்கின்றன
எப்போது இவர்கள் மனதில்
சுதந்திர தீபம்
மனம்விட்டு ஒளிவீசும்

கண்ணா
அடம்பன்




## என்று மறையுமோ?

விழியோரம்
வடியும் நீர்
என்று தான்
மறையுமோ
நம் வாழ்வில்

த.சாருலதா



# புனைகதைப் புயல்



மாமர நிழலில் தூங்கிக்கொண்டிருந்த ராமின் மார்பில் தொப் தொப்பென ஏதோ விழுவது போல இருந்தது. திடுக்கிட்டு விழித்துப் பார்த்தான். சிரித்தபடி 'தமிழ்'
"சித்தா... குதிர.... டக்கட..டக்கட..."

என்று ஆடிக்கொண்டிருந்தாள். அவன் எழ முயற்சித்தான்.
"சித்தா படு..படு"

"சித்தாவுக்கு நோகுது. விடுங்கோ.."
"இல்லை....படுக்கப்போறன்."

அடம்பிடித்தாள் தமிழ். நித்திரையிலிருந்து எழுந்து கடைக்குள் விளையாடிக்கொண்டிருந்தவளைக் காணவில்லை எனத்தேடிக்கொண்டு வீட்டிற்கு பின் மாமரத்தடிக்கு வந்தாள் என்று போகத் திரும்பியவளை
"அம்மா... வா இரு.."

என்று அருகில் இருக்கும்படி கேட்டாள். வதனா அதிர்ந்து போனாள். அவள் எதிர்பார்க்கவேயில்லை. சின்னப்பிள்ளை தானே அவளுக்கு என்ன தெரியும் அப்பாவித்தனமாக அவனுக்கு அருகில் இருக்கும்படி கேட்டாள்.

"இ... இல்.. நா... போறன்... நீ ... விளையாடட்டு வா."

என்று கூறி சட்டென அவ்விடத்தை விட்டு அகன்றாள். அவ்விடத்தில் நிற்க அவளால் முடியவில்லை. ஏற்கனவே அவனைக் கொஞ்சி விளையாடுவதைப் பார்க்க மன அவனுக்கு தேனீர் கொடுத்ததும் தனக்கும் தரும்படி அடம்பிடித்தாள். அதுவும் அவன் குடித்த 'கப்பிலேயே' குடித்தாள். மீதியை அவன் குடித்தான். என்றுமில்லாதவாறு அவனை நிமிர்ந்து பார்க்க அவளுக்கு தயக்கமாக இருந்தது. அப்போது போன் ஒலித்தது. குகன் தான் எடுத்தான்.

"ஹலோ...சொல்லு மச்சான்."
"இப்பதான் வந்தனான்.. வாவன்."
"ஓ...ஓ... வாறன்..."

போனைக் 'கட்' செய்து விட்டு நேரத்தைப் பார்த்தான். நேரம் ஐந்து முப்பத்தைந்தைத் தாண்டியிருந்தது. கதிரையில் இருந்து எழுந்தான். என்னசெய்வது 'போவதா விடுவதா'


**தொடர் - 42**

லீசிங்கிலை எடுத்திட்டு தேவையில்லாம அவங்களுக்கு காசை ஏன்கட்டுவான்."
"என்னட்டை சீட்டெடுத்த காசு கிடக்கு. என்ர புத்தகத்திலையும் எடுத்தாக் காணாதோ?"

"எவ்வளவு வரும்."
"சீட்டு ஐம்பதாயிரம்.... புத்தகத்திலையும் அறுபதுக்குக்கிட்ட கிடக்கவேணும்."
"அப்பிடியெண்டாலும் இன்னும் ஐம்பதெண்டாலும் வேணும்."
அம்மா
"நான் தாறன் நீ எடு..."
"உங்களட்டை எவ்வளவு கிடக்கு."
"எண்பதாயிரம் தாறன்.. பிள்ளேட காசு

# முள்ளிடை முகிழ்த்த மலர்

அன்னக்கிளி



வதனா. அங்கு ராமின் நெஞ்சில் ஏறிநின்று அடம்பிடித்துக்கொண்டிருந்தாள். கிட்ட வந்தவள்...

"பிள்ளை இறங்கி வாம்மா..."
"போ..... நா... படுக்கப்போறன்..போ..."

அவன்மேல்படுத்தபடி கழுத்தைக் கட்டிப்பிடித்தபடி தாயைப் போகும்படி கூறிக்கொண்டிருந்தாள். அவன் ஏலாது எண்டு படுத்தவன் என்பதால் நின்மதியாக படுக்கட்டும் அவளைக் கூட்டிப்போக வேண்டும் என முயற்சித்தாள்.

"வாம்மா... சித்தா படுக்கட்டும்."
"ஆ...போ... எண்ட சித்தா... என்ன.. அவ்வா குடுக்கப்போறன்.. போ..."

"சித்தா பாவம்.... பிறகு வருவம் இப்ப வாங்கோ."
"குழப்படி செய்யமாட்டன்.."

என்று கூறியவள், அவனைக் கட்டிப்பிடித்து கன்னங்களில் முத்தமிட்டாள்.

"குத்துது... வெட்டு"
இரண்டு மூன்று நாட்களுக்கு முன் 'சேவ்' எடுத்த முகத்தின் தாடி குத்தியது. மீசையைப்பிடித்து இழுத்தாள்.

"அ...ஆ. நோகுது பாவமெல்லா சித்தா.."
"சூரன்... சூரன் ..... டன்..டனக்கா... டன்.. டனக்கா..."

என்று ஆட்டினாள்.
"ஆ... தமிழ்......' சித்தா பாவம் விடுங்க."
"என்ட சித்தா ...."

கட்டிப்பிடித்து முகத்தில் மாறிமாறி முத்தமிட்டு செல்லம் சிந்தினாள்.
"தமிழ் குழப்படி செய்தா அடிவேண்டுவியள். வாங்கோ.."

அவள் பிள்ளையை அதட்டினாள். பிள்ளை விடுவதாக இல்லை. மேலும் இறுகக் கட்டிப்பிடித்தபடியிருந்தாள்.

"விடுங்க அவள் சந்தோசமாய் விளையாடுறாள். எனக்கு இப்ப தலையிடி குறைஞ்சிட்டுது அவள் இருக்கட்டும்."
அவன் அப்படிக் கூறியதும் மகிழ்வுடன்,
" ஓ... என்ட சித்தா அச்சா..."

இறுகக் கட்டிஅணைத்து முத்தமிட்டாள். அன்புடனும் மகிழ்வுடனும் அவனுடன் இருப்பதைப் பார்க்க அவளுக்கும் மகிழ்வாகத்தான் இருந்தது. தந்தையிடமிருந்து பெறும் அத்தனையையும்வழங்குவது அவன்தானே பாவம் கொஞ்சநேரம் படுக்கவேண்டும் என்பதால் தான் அப்படிக்கூறினாள்.
"குழப்படி செய்யாம விளையாடுங்கோ.."

தில் ஒருமாதிரியாக இருந்தது. இப்போது அவள் இப்படிச் சொன்னபோது உடம்பெல்லாம் மின்சாரம் பாய்ந்தது போல இருந்தது. அவ்விடத்தில் அவனுக்கு முன்னால் நிற்கவே முடியவில்லை. அதனால்தான் வேகமாக கடைக்குள் சென்றாள்.

நீண்ட நேரத்தின் பின்னரும் ராம் வரவில்லை. ஏன் இவ்வளவு நேரமாக அப்படி என்ன செய்கிறார்கள் என யோசித்தவள், கடைக்குள் மாமனார் வர
"கடைய பாருங்கோ மாமா. பிள்ளைய பாத்திட்டு வாறன்."

என்று கூறி மாமரத்தடிப்பக்கமாக எட்டிப்பார்த்தாள். அவன் மார்பில் படுத்துறங்கிக் கொண்டிருந்தாள். அவனும் அப்படியே அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவள் அடிவயிற்றிலிருந்து புறப்பட்ட வெப்பக்காற்று பெருமூச்சாக வெளியேறியது. அது இளமையின் வேகத்தையும் தாபத்தையும் சுமந்திருந்தது. எழுப்ப நினைத்தாள். ஆனாலும் அவனது அணைப்பில் மகிழ்வாக தூங்குபவளின் நித்திரையை குழப்பாது நின்று பார்த்தாள். மனதில் ஒரு திருப்தியிருந்தது. சத்தமின்றி மீண்டும் கடைக்குள் போனாள்.

நீண்டநேர தூக்கத்தின் பின் இருவரும் எழுந்து வந்தனர். எப்போதும் இப்படி நீண்ட நேரம் தூங்கியது கிடையாது. அதேபோல வழமையாக நித்திரையால் எழும்பும்போது சினுங்கிக் கொண்டுதான் வருவாள். ஆனால் இன்று சிரித்தபடி வந்தாள்.

நேரம் மாலையாகியிருந்தது. கடையில் கூட்டம் சுமாராகத்தான் இருந்தது. தர்சாவும் கடைக்குள் தான் நின்றாள். எழுந்து வருவதைக் கண்டதும் அம்மா தேனீருடன் வந்தாள்.
"அப்பம்மா....எனக்கும்."

என்று முடிவு செய்யாமலே வெளியில் போகமுற்பட்டவன் அவளைத் திரும்பிப்பார்த்தான். தன்னைப் பார்த்தவள் தான் பார்த்ததும் சட்டென திரும்பியதை அவதானித்தான். இது ஏதோ கோபத்தின் வெளிப்பாடு என்பதைப் புரிந்து கொண்டான்.
"போட்டு வரட்டே..."
வழமை போலக்கேட்டான்.
"ஏன் அவசரமில்லைத்தானே."
"இல்லைத்தான்...."

இழுத்தான்.....
"இருண்டிட்டுது இப்பவேண்டாம். அண்டைக்கும் விட்டிட்டு பயந்துகொண்டிருந்தனாங்கள். காலமை போகலாம்."

முடிவாகவே கூறினாள். தாயும் அதைத்தான் கூறுவார் என்பது அவனுக்கு தெரியும். அதனால் மீண்டும் போய் கதிரையில் அமர்ந்தான். ஆயினும் படம் எப்படியிருக்கும் என்று பார்த்துவிடும் ஆவலில்

"அம்மா ரவுணுக்கொருக்கா போட்டு வரட்டே."
"இருட்டீட்டுது ஏன்.."
"ஸ்ரூடியோக்காரன் வீட்ட.."
"வேண்டாம் காலமை போ..."

என்று உறுதியாக கூறியவள்.
"நீமோட்டச்சைக்கில் எடன். எந்தநேரமும் திரியலாம்."

தனது நெடுநாள் ஆசையை கூறினாள். வதனாவும் சேர்ந்துகொண்டாள்.
"ஓம்மாமி எடுத்திட்டால் நல்லம். ஒருநாளைக்கு நாலுதரம் வெய்யிலுக்கை ரவுனுக்கு சைக்கில்லை அலையிறதே வருத்தம்."

"எனக்கு எடுத்திட்டால் வேலை சுகம் தான். காசு வரட்டும் எடுப்பம்.

கிடக்கட்டும்."

"அ... அப்ப எடுப்பம்.. எங்கத்தையால உங்களுக்கு இவளவு காசு."
"முகாமில வைச்சு அடைவுக்கு குடுத்தனான். நேற்றுத்தான் காசு தந்திட்டு எடுத்திட்டுப் போனதுகள்."

"எடுக்கிற சைக்கிலை நல்லதாய்ப் பாத்து எடுக்கவேணும். காசு காணாட்டி என்ர புத்தகத்திலையும் எடுப்பம்."

கதைத்துக்கொண்டிருக்கும் போதே மீண்டும் குகனிடமிருந்து கோல் வந்தது.
"என்ன வாறியோ.."
"காலமை வாறன்.."

"குகனைக் கேள் நாளைக்கு மோட்டைச்சைக்கில் எடுக்க வாறியோ எண்டு."
அம்மா திட்டத்தை நெறிப்படுத்தினார். குகனுக்கு ஏதோ விளங்கிவிட
"அம்மா என்னவாம்."
"அது... எனக்கு மோட்டைச்சைக்கில் ஒண்டு எடுக்கவேணும். அதுதான் உன்னைக் கேக்கட்டாம்."

"அதுக்கென்ன இஞ்சையே கொம்பனி திறந்திட்டாங்கள். எல்லாடமும் ஒரே விலைதான் இஞ்சை பாத்து எடுப்பம்."
"அ....சரி..."

"கடைக்கு வெளிக்கிடேக்கை கோல் எடு... நான் வாறன்."
"ஓகே.பாய்"

போனைக் 'கட்' செய்தான். கதைத்துக்கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. அவன் கடைக்கு வெளியே அடுக்கியிருந்த பொருட்களை எடுத்து உள்ளே அடுக்கி கடையைப் பூட்டினான். தர்சா படிக்க புத்தகங்களோடு மேசையில் இடம்பிடித்துக்கொண்டாள். அவனுக்கு அலுப்பாகவேயிருந்தது. தாயிடம் போய் சாப்பாடு வாங்கிச்சாப்பிட்டு விட்டு படுக்க ஆயத்தமானான். 'தமிழ்' தாத்தாவுடன் முற்றத்தில் நிலா பார்த்து உணவுண்டு பின் அவர் மடியிலேயே நித்திரையாகிப் போனாள்.

வதனா சமையல் பாத்திரங்களை கழுவி வைத்துவிட்டு தர்சாவுடன் சாப்பிட்டாள். தனக்கு சாப்பிட்டால் நித்திரை வரும் படிக்க முடியாது என்று அவள் படுக்க போகும்போது தான் சாப்பிடுவாள். அவள் வருமட்டும் இருந்து தான் வதனாவும் சாப்பிடுவாள். இப்படிச்சாப்பிட்டபின் ...

அவள் வருவாள்...

# ஆன்மீக உலகம்

## யாரை மேன்மை பாராட்டுவது



அவனோ இளம் வயது வாலிபன். அவனுக்கு முன்பாக வளமான வாழ்வு இருந்தது. இந்நிலையில், அவன் முழுநேர ஊழியனாய் வரும்படி உறுதியுள்ள தீர்மானம் உடையவனாய் காணப்பட்டான். இது மற்றவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

நீ இப்படிப்பட்ட தீர்மானத்திற்குள் வரக் காரணம் என்ன? என ஒருவர் கேட்டார். அதற்கு அந்த வாலிபன், தன் பள்ளிநாட்களில் ஒருமுறை கேட்ட பிரசங்கமே இந்த தீர்மானத்திற்கு வர உந்தித் தள்ளியதாகக் கூறினான்.

இந்த பதிலைக் கேட்ட மற்றவர்கள், ‘‘வாழ்வில் மாற்றம் ஏற்படக் காரணமாக இருந்த பிரசங்கியாரின் பெயரைக் கூற முடியுமா?'' எனக் கேட்டனர்.

அவன், ‘‘ஐயா! அன்று பேசிய பிரசங்கியாரின் பெயர் தெரியாது. ஆனாலும், அவர் மூலமாக பேசிய தேவன் இயேசு கிறிஸ்துவை எனக்கு நன்றாகத் தெரியும்'' என்று கூறினான்.

போதகர் தா. ஹென்றி ஜோசப் என்பவர், ‘‘பிரசங்கம் பண்ணுவது மேலான ஊழியம். ஆனாலும், பேசி முடித்த பின்பு, கேட்பவர்களின் உள்ளத்தில் நிலைத்திருப்பது பிரசங்கியாரா? அல்லது பிரசங்கப் பொருளா? அல்லது தேவனா?'' என்று தம் சபை மக்களிடம் கேட்டது குறிப்பிடத்தக்க விஷயம்.

இந்த நவீன காலத்தில் உலகெங்கும் திருச்சபைகள் வேகமாக பெருகி வருகிறது. பல பிரசங்கியார்கள் உருவாகியுள்ளனர். தேவனுடைய ஊழியர்களை, தேவன் தனது வல்லமையால் பயன்படுத்தி வருகிறார்.


ஆனால், திருச்சபை விசுவாசிகளில் பலர் தேவனை மனதில் நிலைப்படுத்திக் கொள்ளாமல், பிரசங்கியாரின் புகழ் பாடுகின்றனர். பெரியவர், சிறியவர், பணக்காரர், ஏழை, பெரியசபை போதகர், சிறியசபை போதகர் என்றெல்லாம் வித்தியாசம் பார்க்கும் மனநிலை சில இடங்களில் உள்ளது.

தேவனுடைய வார்த்தையைப் பேசும் நபர் யாராக இருந்தாலும் சரி, பேசும் நபர் முக்கியமல்ல. ஊழியர்களை கனம் பண்ண வேண்டும். அவர்களுடைய வார்த்தைகளை மதிக்க வேண்டும்.

அதே நேரத்தில், அவர்களை தலையில் வைத்து ஆடக்கூடாது. ஆதிசபை காலத்திலேயே, ‘‘நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும்....'' (1கொரி.112) சொல்லிக் கொண்டிருந்தனர்.

இயேசுவே நமக்காக இரத்தம் சிந்தினார். ஆகவே, ஊழியர்களை மேன்மை பாராட்டாதபடி, அவர்கள் ஆராதிக்கிற இயேசுவையே மேன்மை பாராட்டுவோம்.

## நீ நடந்து வா! அவன் ஓடி வருவான்



நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ் தன்னிடம் கூறிய விஷயங்களை சொல்கிறார்கள்.. கேளுங்கள்.

* எவன் என்னிடம் ஒரு சாண் நெருங்கி வருகின்றானோ, அவனிடம் நான் ஒரு முழம் நெருங்கி வருகின்றேன்.

* என்னிடம் ஒரு முழம் நெருங்கி வருபவனை நான் இரண்டு முழம் நெருங்குகின்றேன்.

* எவன் என்னிடம் நடந்து வருகின்றானோ அவனை நோக்கி நான் ஓடி வருகின்றேன்.

* என்னை அழைப்பவர் எவரேனுமுண்டா? அவருக்கு நான்பதில் கூறுகின்றேன்.

* என்னிடம் கேட்பவர் எவரேனுமுண்டா? அவருக்கு நான் வாரி வழங்குகின்றேன்.

* என்னிடம் மன்னிப்பு வேண்டுபவர் எவரேனுமுண்டா? அவரை நான் மன்னிக்கின்றேன்.

அல்லாஹ்விடம் எதையேனும் கேட்க விரும்புபவர்கள் அதிகாலைப் பொழுதில் கேட்க வேண்டும். ஏனெனில், இரவுக்காலத்தை மூன்றாகப் பிரித்து, அதில் இரண்டு பங்கு கழிந்த பின், மூன்றாம் பங்கு தொடங்கியவுடன் அல்லாஹ், முதல் வானத்தின் மீது இறங்கி வந்து தன் அடியார்களை அழைத்துச் செல்கிறான்.

இதன் மூலம் அதிகாலையில் விழிப்பதையும், தொழுவதையும் இஸ்லாம் ஊக்கப்படுத்துகிறது.

## ஏன் இத்தனை கடவுள்



கோயிலில் பக்திச் சொற்பொழிவு நடந்து கொண்டிருந்தது. பேசியவர், ஸ்ரீதேவியை வணங்கு அருள் தருவார் பெருமாள். துர்க்கையை துதித்தால் துன்பம் நீங்கும். பிள்ளையாரை வழிபட பிரச்சினை தீரும். ஒப்பிலியப்பனை வணங்கினால் வாழ்வு வளமாகும் என்று பேசிக் கொண்டிருந்தார். ஒருவர் எழுந்து இடைமறித்தார்.

‘‘ஐயா! ஆண்டவன் ஒன்று தானே! ஆனால், பல தெய்வங்களின் பெயரைச் சொல்கிறீர்கள். இன்ன கடவுளிடம், இன்னதான் கேட்க வேண்டும் என விதிமுறை இருக்கிறதா என்ன? அல்லது ஒவ்வொரு கடவுளும் ஒவ்வொன்று தருவரா?'' பேச்சாளர் கேட்டார்.

‘‘உன் வயதென்னப்பா?''

‘‘ஏழு''

‘‘உன் பக்கத்தில் இருப்பவர்கள் யாரப்பா....?''

என் அம்மா அக்கா அது என் அப்பா...''

பேச்சாளர் சொன்னார். ‘‘உனது கல்வி, உணவு, விளையாட்டுப் பொருள் என தேவையைப் பொறுத்து, அப்பாவிடமோ, அம்மாவிடமோ, அக்காவிடமோ கேட்கிறாய் இல்லையா....! அதே போல், எல்லோரும் அவரவருக்கு தேவையானதை அவரவருக்கு பிரியமான கடவுளிடம் கேட்கிறார்கள். இதனால் தான் பலதெய்வ வழிபாடு! புரிகிறதா!'' என்றார்.

சிறுவன் புரிந்து கொண்டான். கேட்ட எல்லாருக்கும் சிறந்த உபதேசமானது.

## நற்சிந்தனைகள்

நல்ல முடிவுகள், அனுபவத்திலிருந்து பிறக்கின்றன. ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது.

சிக்கல்கள் என்பவை, ஓடும் ரெயிலிலிருந்து பார்க்கும் மரங்களைப் போன்றவை. அருகில் போனால் அவை பெரிதாகத் தெரியும். அவற்றைக் கடந்து சென்றால் அவை சிறிதாகி விடும். இதுதான் வாழ்க்கை!

நீ தனிமையில் இருக்கும்போது உனக்கு என்ன என்ன தோன்றுகிறதோ அதுதான் உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கும்.

வெற்றி என்பது நிரந்தரமல்ல் தோல்வி என்பது இறுதியானதுமல்ல! ஒரு நொடி துணிந்தால் இறந்துவிடலாம். ஒவ்வொரு நொடியும் துணிந்தால் நாம் ஜெயித்து விடலாம்....

மிகவும் நேர்மையாக இருக்காதீர்கள் ஏனெனில் நேரான மரங்கள் முதலில் வெட்டப்படும்.

நேர்மையானவர்களே முதலில் பழி தூற்றப்படுவார்கள். கொஞ்சம் வளைந்து கொடுங்கள். வாழ்க்கை. இலகுவாய் இருக்கும். - சாணக்கியனின் பொன்மொழி

மெழுகுவர்த்திக்கு உயிர் கொடுக்க உயிர்விட்டது தீக்குச்சி. நினைத்து நினைத்து உருகியது மெழுகுவர்த்தி.

விட்டுக் கொடுங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.
தட்டிக் கொடுங்கள் தவறுகள் குறையும்.
மனம் விட்டுப் பேசுங்கள் அன்பு பெருகும்.

உதவும் கரங்கள் ஜெபிக்கும் உதடுகளைவிடச் சிறந்தது. - அன்னை தெரஸா.

வெற்றி என்பது நிரந்தரமல்ல தோல்வி என்பது இறுதியானதுமல்ல! அதனால், வெற்றிக்குப் பிறகு தொடர்ந்து உழைப்பதை நிறுத்த வேண்டாம். தோல்விக்குப் பிறகு தொடர்ந்து முயல்வதை நிறுத்த வேண்டாம்!

கண்களைத் திறந்து பார் அனைவரும் தெரிவார்கள். கண்களை மூடிப் பார். உனக்குப் பிடித்தவர்கள் மட்டும் தெரிவார்கள்!

தோல்வியின் அடையாளம் தயக்கம்! வெற்றியின் அடையாளம் துணிச்சல்! துணிந்தவர் தோற்றதில்லை தயங்கியவர் வென்றதில்லை!

கையில் 10 ரோஜாக்களோடு கண்ணாடி முன் நில்லுங்கள்! இப்போது நீங்கள் 11 ரோஜாக்களைக் காண்பீர்கள்! அந்த 11ஆவது ரோஜா. உங்கள் புன்னகை!
நீங்கள் இப்போது புன்னைப்பதை நான் அறிவேன்! வெற்றியை விரும்பும் நமக்குத் தோல்வியைத் தாங்கும் மனம் இல்லை தோல்வியைத் தாங்கும் மனம் இருந்தால் அதுவும் ஒரு வெற்றிதான்.....

இதை மெதுவாகப் படியுங்கள்:
LIFE IS NO WHERE
இதை எப்படிப் படித்தீர்கள்?
LIFE IS NO WHERE என்றா?
LIFE IS NOW HERE என்றா?

நாம் பார்க்கிற விதத்தில்தான் வாழ்க்கை இருக்கிறது என்பதை இந்த ஒற்றை வரி உணர்த்திவிடுகிறது...! நீங்கள் ஒரு வாய்ப்பைத் தவறவிட்டால் உங்கள் விழிகளைக் கண்ணீரால் நிரப்பாதீர்கள்! உங்கள் கண்ணீர். உங்கள் முன் உள்ள இன்னொரு வாய்ப்பை மறைத்துவிடும்! அழகிய புன்னகையுடன் எதிர்கொள்ளுங்கள்.....!


நீ மற்றவருக்கு வழிகாட்டி ஆவதற்காகப் பிறந்திருக்கிறாய். ஏன் மற்றவர்களிடம் உன் வழிகாட்டியைத் தேடிக் கொண்டிருக்கிறாய்?
இந்த உலகம் உன் வெற்றிக் கதையைப் படிக்கக் காத்துக்கொண்டிருக்கிறது.....

பிறக்கும்போது தாயை அழவைக்கிறோம் இறக்கும்போது எல்லோரையுமே அழவைக்கிறோம் வாழும்போதாவது எல்லோரிடமும் சிரிக்கப் பழகுவோம்......


வியர்வைத் துளிகளும் கண்ணீர்த் துளிகளும் உப்பாக இருக்கலாம். ஆனால், அவைதான் வாழ்வை இனிமையாக மாற்றும்........

நாம் அனைவரும் ஒரே அளவு திறமை பெற்றவர்கள் இல்லை ஆனால், நம் திறமையை வளர்த்துக்கொள்ள ஒரே அளவு வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறோம். - அப்துல்கலாம்.

ஓர் உண்மை: நீ மகிழ்ச்சியாக இருக்கும்போது.



# அறிவியல் உலகம்



## சர்வதேச விண்வெளித் தோட்டத்தில் பசுமைப்புரட்சி




உலக நாடுகள் இணைந்து அமைத்துள்ள சர்வதேச விண்வெளி மையத்தில் பணியாற்றும் விண்வெளி வீரர்களின் உணவுத் தேவைகளுக்காக அங்கே லடா என்ற பசுமைத் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு சோதனை முயற்சியாக காய்கறிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

பட்டாணி, கீரை வகைகள் மற்றும் குள்ள வகையைச் சேர்ந்த கோதுமை போன்றவை இதுவரை அங்கு விளைவிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சாப்பிடுவதற்கு பாதுகாப்பானவை என்ற சான்றிதழைப் பெற்றுள்ளதாக உயிர்மருத்துவவியல் சிக்கல்கள் குறித்து ஆய்வு செய்யும் ரஷ்ய நிறுவன ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டிற்கான பழுது பார்க்கும் பணி நிறைவடைந்தவுடன் அரிசி, தக்காளி, மணி மிளகு போன்றவை அங்கு பயிரிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. விண்வெளி வீரர்களின் உணவுத் தேவைக்காக இந்தப் பயிர்கள் பயன்படுவதோடு விண்வெளியில் ஏற்படக்கூடிய மரபணு மாற்றங்கள் குறித்த ஆய்விலும் இவை பயன்படுத்தப்படும் என்று ஆய்வு நிறுவனம் குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்வெளியில் அமைக்கப்படும் வாழ்விடம் குறித்த நம்பிக்கையை அளிப்பதாக இந்த முடிவுகள் இருப்பதாக ரஷ்ய ஆய்வு நிறுவனம் தெரிவிக்கின்றது. அமெரிக்காவின் உடா மாகாண பல்கலைக்கழகத்தின் விண்வெளி டைனமிக்ஸ் ஆய்வகத்துடன் இணைந்து ரஷ்ய நிறுவனம் இந்த விவசாய முயற்சியில் இறங்கியுள்ளது.

## மிகச்சிறிய டெஸ்க்டொப் கணினியை அறிமுகப்படுத்தும் Asus



மிகவும் சிறிய அளவுடையதும் விண்டோஸ் 8.1 இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டதுமான மினி டெக்ஸ்டொப் கணனியினை Asus நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

Eee Box EB1037 எனும் வியாபாரக் குறியீட்டினைக் கொண்ட இக்கணனியானது 2GHz வேகத்தில் செயற்படக்கூடிய Quad-Core Processor, பிரதான நினைவகமாக 8GB RAM ஆகியவற்றினை உள்ளடக்கியுள்ளது.

மேலும் சாதாரண கணனிகளை விடவும் 70 சதவீதம் மின் சக்தி சேமிப்பைக் கொண்ட இக்கணனியில் சேமிப்பு நினைவகமாக 320GB இருந்து 1TB வரை கொள்ளவுடைய வன்றட்டுக்கள் இணைக்கப்பட்டுள்ளன.

## Huawei அறிமுகப்படுத்தும் ascend Y530



Huawei நிறுவனமானது Huawei Ascend Y530 எனும் ஸ்மார்ட் கைப்பேசியினை வெளியிடப்போவதாக அறிவித்துள்ளது. இதன்படி முதன் முதலாக ஜேர்மனியில் அறிமுகம் செய்யப்படவுள்ள இக்கைப்பேசியானது 4.5 அங்குல அளவு 400 x 854 Pixel Resolution உடைய TFT LCD தொழில்நுட்பத்தினைக் கொண்ட தொடுதிரையினைக் கொண்டுள்ளது.

மேலும் Android 4.3 Jelly Bean இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இக்கைப்பேசியில் 1.2GHz வேகத்தில் செயற்படக்கூடிய Processor மற்றும் 512MB RAM ஆகியனவும் சேமிப்பு நினைவகமாக 32GB கொள்ளளவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவை தவிர 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, வீடியோ அழைப்புக்களுக்கான VGA கமெரா ஆகியவற்றினையும் கொண்டுள்ளது. இதன் விலையானது 149 யூரோக்கள் ஆகும்.

## நவீன தொழிநுட்பத்துடன் கூடிய புளூடூத் ஸ்பீக்கர்




Divoom எனும் நிறுவனமானது புளூடூத்வயர்லெஸ் தொழில்நுட்பத்துடன் கூடியதும் இடத்துக்கு இடம் எடுத்துச் செல்லக்கூடியதுமான ஸ்பீக்கர்களை அறிமுகம் செய்துள்ளது.

Voombox எனப்படும் இந்த ஸ்பீக்கர்களில் 12 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக மின்னை வழங்கக்கூடிய மின்கலங்கள் இணைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவற்றில் உள்ள Bluetooth 4.0 தொழில்நுட்பமானது 10 மீற்றர்கள் வரை செயற்படுதிறன் கொண்டவையாகவும் காணப்படுகின்றன.

7.5W வலுவுடைய இந்த ஸ்பீக்கர்கள் 75dB ஒலிச்செறிவை உற்பத்தி செய்யக்கூடியதாக இருப்பதுடன் 185 x 60 x 78mm என்ற அளவிடைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை நீலம், பச்சை, சிவப்பு மற்றும் கறுப்பு நிறங்களில் கிடைக்கின்றன.

## பயனர்களுக்கு எச்சரிக்கை விடுத்தது யாகூ




பிரபல்யமான மின்னஞ்சல் சேவை வழங்குனர்களுள் ஒருவராகத் திகழும் யாகூ நிறுவனமானது தனது பயனர்களுக்கு எச்சரிக்கை செய்தி ஒன்றினை விடுத்துள்ளது. அதாவது பயனர்கள் பயன்படுத்தும் மின்னஞ்சல்களின் கடவுச்சொற்களை உடனடியாக மாற்றிக்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளது.

கடந்த மாதங்களில் யாகூ தளத்தினை ஊடுருவும் செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பதாக அந்நிறுவனம் தெரிவித்திருந்த அதேவேளை தற்போது ஹக்கர்கள் மீண்டும் மின்னஞ்சல் கணக்குகளை ஹக் செய்ய எத்தனித்துக்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் உங்கள் யாகூ மின்னஞ்சலின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு கைப்பேசிகளுக்கு SMS மூலமாகவோ அல்லது மாற்று மின்னஞ்சலின் ஊடாகவோ உள்நுழையும்போது எச்சரிக்கை செய்தியை பெறும்பொருட்டு தகவல்களை வழங்குமாறு அந்நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

## விண்டோஸ் 8.1 சாதனங்களுக்கான பேஸ்புக் அப்ளிக்கேஷன்




மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பிந்திய பதிப்பான விண்டோஸ் 8.1 இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட சாதனங்களில் நிறுவி பயன்படுத்துவதற்கான பேஸ்புக் அப்பிளிக்கேஷன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் நண்பர்களுடனான சட்டிங்ஸ் மற்றும் பின்னூட்டல்களை இலகுவாக பெற்றுக்கொள்ள முடிவதுடன் இலகுவாகவும், விரைவாகவும் புகைப்படங்களை தரவேற்றும் வசதியையும் பெற்றுக்கொள்ள முடியும். இவை தவிர கொமண்ட்ஸ், லைக் போன்ற செயற்பாடுகளை உடனுக்குடன் அறிந்துகொள்ளவும் முடியும்.

## ஸ்டெம்செல்கள் உருவாக்கத்தில் புதிய முன்னேற்றம்




ஸ்டெம்செல்கள் உருவாக்கத்திற்கான ஆராய்ச்சியில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். மனித உடம்பில் பல வகையான அணுக்களின்(செல்) தொகுப்புகள் உள்ளன.

இவைகளில் நரம்பு, தரை, கல்லீரல் என ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட செயல்பாடுகள் உண்டு. இதில் ஏதேனும் ஒன்றில் பாதிப்பு ஏற்பட்டால், ஸ்டெம் செல்களை பயன்படுத்துவதன் மூலம் பழுதடைந்த பகுதியை புதுப்பித்துக் கொள்ள முடியும் என ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர். இந்த செயல்பாடு பரவலாக கண், இதயம், மூளை சிகிச்சை முறைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தற்போது ஜப்பானில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி ஒன்றில், எலிகளின் இரத்த அணுக்களை அமிலத்தில் நனைத்தபோது அவை ஸ்டெம்செல்களாக உருமாறுவதைக் கண்டுபிடித்துள்ளனர். ஸ்பாட் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த செல்களின் உற்பத்தி குறித்து ரிகேன் மையத்தில் உள்ள உயிரியல் வளர்ச்சிப் பிரிவில் ஆய்வு செய்துவரும் டாக்டர் ஹருகோ ஓபோகடா, தான் மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனதாகத் தெரிவித்தார்.

இதே முறையில் தற்போது மனித இரத்தத்தில் ஸ்டெம்செல்களை உருவாக்க ஆராய்ச்சி நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முறை வெற்றி பெறுமேயானால் குறைந்த செலவில் விரைவாகவும், பாதுகாப்பான முறையிலும் ஸ்டெம்செல்களை உருவாக்க முடியும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## கரப்பான் பூச்சிகளின் மூலம் மின்சாரம்




கரப்பான் பூச்சிகளை வைத்து ஜப்பான் பல்கலைகழக மாணவர்கள் புதுவித சென்சார்களை உருவாக்கியுள்ளனர். கரப்பான் பூச்சிக்கு இரு மீசைகள் இருக்கும். அதாவது இவைகளை உணர் உறுப்புகள்(Antennae) என்று அழைக்கின்றனர். இதன் மூலம் முன்புறத்தில் ஏதேனும் தடை உள்ளதாக என அறிந்து கொள்ளும்.


இதே போல கரப்பான் பூச்சியின் பின்புறத்தில் வேறு வித உணர் உறுப்புகள்(cerci) உள்ளன, பின்புறத்திலிருந்து தன்னைப் பிடிக்க ஏதேனும் வருகிறதா என்பதை இந்த உறுப்புகள் கண்டறிந்து தெரிவிக்கும். இதனை கொண்டு ஜப்பானின் ஓசாகா பல்கலைகழகம் புதுவித சென்சார்களை உருவாக்கியுள்ளது. இந்த சென்சார்களின் மூலம் மிக எளிதாக தகவல்களை பரிமாறி கொள்ள முடியும்.


கரப்பான் பூச்சிகளின் முதுகில் சென்சாரும் அதன் கூட 20mm x 15mm அளவுக்கு ஒரு ஃப்யூள் செல்லும் இணைக்கப்பட்டிருக்கும். இந்த ஃப்யூள் செல் வேலை செய்ய, கரப்பான் பூச்சியின் உடலில் ட்ரஹலோஸ்(trehalose) என்னும் திரவம் மற்றும் ஒரு சிறிய ஊசியை செலுத்துவார்கள். இந்த திரகம் உள்ளே எலக்ட்ரோட்ஸை உருவாக்கும், அதன் மூலம் குளுகோஸ் கிடைக்கும். இந்த எலக்ட்ரோட்ஸ் மூலம் ஊசி அனோட் ஃகாத்தோடாக மாறி நிரந்திர மின்சாரம் கிடைக்கும், இது சென்சாரின் உபயோகத்திற்கு வாழ்நாள் முழுவதும் கிடைக்கும் எனப்படுகிறது.

# விளையாட்டு உலகம்

## வவு/தமிழ் மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி





வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டியானது 06.02.2014 அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி.ப.கணேசலிங்கம், (வலயக்கல்விப்பணிமனை வவுனியா வடக்கு) அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக திரு.என்.பாலச்சந்திரன், திரு.எஸ்.ஞானசம்பந்தன், அல்ஹாஜ்.எ.கரீம் முஹம்மட் ரெய்ஸ் கௌரவ விருந்தினர்களாக எஸ்.கௌதமன் (பழைய மாணவர்), கே.லபோசன் (பழைய மாணவர்) உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் காணலாம்.

தகவல் :- இ.தர்சன்

## வவு/முஸ்லீம் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுனர் போட்டி





வவுனியா முஸ்லீம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியானது எம்.எஸ்.எம் றம்ஸின் தலைமையில் 06.02.2014 நடைபெற்றிருந்தது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக திரு.கே.உதயராசா(பிரதேச செயலாளர் வவுனியா)ஜனாப் ஐ.எஸ்.எம். முகைதீன்(பிராந்திய ஆணையாளர் வவுனியா) ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வுக்கான படங்களைக் காணலாம்.

தகவல் :- பாஸ்கரன் கதீஸன்.

## பயிற்சியாளர் பதவியை மறுக்கும் கிலெஸ்பி



அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளர் ஜேசன் கிலெஸ்பி இங்கிலாந்து பயிற்சியாளராக தெரிவு செய்யப்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. எனினும் தான் அந்த பதவியை ஏற்கத் தயாரில்லை என கிலெஸ்பி அறிவித்துள்ளார்.

அன்டி ப்ளவர் - பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து விலகியதும் ஊடகங்களில் அதிகமான வாய்ப்புக்கள் ஜேசன் கிலெஸ்பிக்கு இருப்பதாக செய்திகள் வெளியாகி இருந்தன. இந்த நிலையிலேயே கிலெஸ்பி தான் அதற்குத் தயார் இல்லை என தெரிவித்துள்ளார். யோர்க்ஸெயர் அணி யின் வெற்றிகரமான பயிற்றுவிப்பாளராக திகழ்ந்து வரும் கிலெஸ்பியின் நேர் முறையிலான நடவடிக்கைகளும், வித்தியாசமான கஷ்டமான முறையில் பயிற்சிகளை வழங்கி வருகின்றமையும் இவருக்கான வாய்ப்புகளை அதிகமாக வழங்கி இருந்தது.

தான் யோர்க்ஸெயர் அணியுடன் இன்னும் சில காலம் கடமையாற்றுவதில் பிடிவாதமாக இருபதாகவும், அந்த வீரர்களுடன் இன்னும் கடமையாற்ற வேண்டிய கட்டாயம் இருபதாகவும் கிலெஸ்பி தெரிவித்துள்ளார்.

இதே வளை தனது பிராந்திய அணி சரியான முறையில் செல்வதாகவும் தான் இன்னும் பயின்று வருவதாகவும் தான் எந்த இடத்தில் இருக்கின்றேன் என்பதும் தனக்கு தெரியும் எனவும் தெரிவித்த அவர் சர்வதேச ரீதியில் பயிற்சியாளராக கடமையாற்ற விருப்பம் இருக்கின்ற போதும் இது அதற்கான சரியான நேரம் இல்லை என மேலும் தெரிவித்துள்ளார் ஜேசன் கிலெஸ்பி.


## பாரத ரத்னா விருது பெற்றார் சச்சின்



சச்சின் டெண்டுல்கருக்கு பாரத ரத்னா விருதை வழங்கி ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி கௌரவித்துள்ளார். கிரிக்கெட்டின் சகாப்தம் என்று அழைக்கப்படுவர் சச்சின் தெண்டுல்கர். தனது 200வது டெஸ்ட் போட்டியோடு ஓய்வு பெற்றார். 24 ஆண்டுகள் நீண்ட நெடும் பயணத்துக்குப் பிறகு கடந்த நவம்பர் 16ஆம் திகதி சொந்த மண்ணில் பிரியாவிடை பெற்றார். டெண்டுல்கரின் சாதனைகளை பாராட்டும் விதமாகவும், இந்திய அணிக்கு அவரது சேவைகளை கௌரவிக்கும் விதமாக நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருதை வழங்குவதாக அவர் ஓய்வு பெற்ற தினத்தில் மத்திய அரசு இதை அறிவித்திருந்தது.

இவ்விருதைப் பெற்றதனூடாக பாரத ரத்னா விருதை பெற்ற முதல் விளையாட்டு வீரர் என்ற சாதனையை டெண்டுல்கர் பெற்றார். மேலும் குறைந்த வயதில் இந்த விருதை பெற்றவர் என்ற பெருமையும் அவருக்கு கிடைத்துள்ளது.

## மரடோனாவின் அதிருப்தி



கால்பந்தாட்ட அரங்கின் ஜம்பவான்களில் ஒருவரான மரடோனா கடும் கோபத்தில் இருக்கிறார். கால்பந்து அரங்கில் பிரேசிலின் பீலே(வயது 73), அர்ஜெண்டினாவின் மரடோனா(வயது 53) போன்ற ஜம்பவான்களை தெரியாதவர்களே இருக்க முடியாது. இதில் பீலேயை பொறுத்தவரையில், பிரேசில் அணிக்காக (1958, 62, 70) மூன்று முறை உலக கிண்ணத்தை வென்று தந்தார். ஓய்வு பெற்ற பின்பும், கால்பந்தின் வளர்ச்சிக்கு உதவி வருகிறார். சமீபத்தில் இதை பாராட்டி பிபா(உலக கால்பந்து கூட்டமைப்பு) விருது வழங்கி கௌரவித்தது.

இதனால் இவரின் இரசிகர்கள் பலர் மகிழ்ச்சியில் இருந்தாலும் மரடோனா மட்டும் கோபத்தில் இருக்கிறார். இதுகுறித்து மரடோனா கூறுகையில் என்னுடன் பீலேவை ஒப்பிட்டு பார்த்தால் நான் தான் சிறந்த வீரர். பிரேசில் நாட்டை பொறுத்தவரை மறைந்த பார்முலா-1 வீரரான அயர்டன் சென்னாதான் சிறந்த விளையாட்டு வீரர்.

இவருக்குப்பின் தான் பீலே வருவார். இவர் உலக கிண்ணத்தை வென்று கொடுத்த போது, விருது வழங்கவில்லை. அப்போது ஐரோப்பிய வீரர்களின் ஆதிக்கம்தான் நிலவியது. இப்போது புதியதாக விருது கொடுத்துள்ளனர் என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

## குமார் சங்க்கார சாதனை



டெஸ்ட் கிரிக்கெட்டில் இலங்கை சார்பாக அதிக சதங்களைப் பெற்ற வீரர் மற்றும் பங்களாதேஷுக்கு எதிராக அதிக சதங்களைப் பெற்ற வீரர் ஆகிய இரண்டு சிறப்புகளை குமார் சங்கக்கார பெற்றுள்ளார்.

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவர் இந்த மைல்கல் சாதனைகளை எட்டினார். இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இணைந்த குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜயவர்தன ஜோடி மூன்றாம் விக்கெட்டில் 178 ஓட்டங்களைப் பகிர்ந்தது. மஹேல ஜயவர்தன தனது 46 ஆவது டெஸ்ட் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்ய, குமார் சங்கக்கார தனது 34 ஆவது டெஸ்ட் சதத்தை எட்டினார்.

இதன் மூலம் இலங்கை சார்பாக அதிக டெஸ்ட் சதங்களைப் பெற்ற வீரர் என்ற பெருமையை குமார் சங்கக்கார தனதாக்கிக்கொண்டார். இந்தப் பட்டியலில் கடந்த வாரம் முன்னிலை பெற்ற மஹேல ஜயவர்தன, 33 சதங்களுடன் இரண்டாமிடத்தில் உள்ளார். அத்துடன், மஹேல ஜயவர்தன வசமிருந்த பங்களாதேஷுக்கு எதிரான அதிக டெஸ்ட் சதங்கள் சாதனையும் குமார் சங்கக்கார வசமானது. பங்களாதேஷுக்கு எதிராக மஹேல 5 டெஸ்ட் சதங்களைப் பெற்றுள்ளதுடன் சங்கக்கார ஆறாவது சதத்தை அடைந்தார்.

## இலங்கையில் முதலீடு செய்ய ஷேன்வோர் ஆர்வம்




அவுஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் நட்சத்திர வீரர் ஷேன் வோன் இலங்கையில் முதலீடு செய்ய தீர்மானித்துள்ளார். இதற்காக அவர் விரைவில் இலங்கைக்கு செல்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூ சௌத் வேல்ஸில் உள்ள இலங்கையின் தூதரக அதிகாரி பந்துல ஜெயசேகர இதனை தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற இலங்கையின் சுதந்திரதின நிகழ்வின் போது ஜெயசேகர இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

# உலகச் செய்திகள்

## மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தலைவர் பதவிவிலகல்



உலகின் முதனிலை கணனி மென்பொருள் நிறுவனங்களில் ஒன்றான மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து பில்கேட்ஸ் விலகிக்கொண்டார். உலகச் செல்வந்தர்களில் முன்னணி வகித்து வரும் பில்கேட்ஸ் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் ஸ்தாபகர் ஆவார்.

இந்நிலையில் பணிப்பாளர்களில் ஒருவரான ஜோன் தொம்பசன் நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். பணிப்பாளர் பதவியிலிருந்து விலகிக் கொண்ட பில்கேட்ஸ், நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசகராக தொடர்ந்தும் பணியாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் கடமையாற்றுவார் என குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட சத்யா நடெல்லா மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் க்ளவுட் மற்றும் என்டர்பிரைஸ் பிரிவின் பணிப்பாளராக நடெல்லா கடமையாற்றி வந்தார். இதுவரை காலமும் நிறைவேற்றுப் பணிப்பாளராக கடமையாற்றி வந்த ஸ்டீவ் பால்மர், பதவி விலகுவதாக கடந்த ஆண்டே அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தொழில்நுட்பம் ஊடாக உலகை மாற்றியமைத்த ஒருசில உலக நிறுவனங்களில் மைக்ரோசொப்ட் நிறுவனம் முன்னணி வகிக்கின்றது. நிறுவனத்தை வழிநடத்த தெரிவு செய்யப்பட்டுள்ளதனை விடவும் வாழ்க்கையில் அதிகப்படியான கௌரவம் எப்போதும் கிடைக்கும் என நம்பவில்லை என நடெல்லா தெரிவித்துள்ளார்.

பாவனையாளர்களுக்கு துரித கதியில் புத்தாக்க விடயங்களை அறிமுகப்படுத்துவதே தமது பிரதான இலக்கு என அவர் குறிப்பிட்டுள்ளார். 46 வயதான நடெல்லா நிறுவனத்தின் மூன்றாவது நிறைவேற்றுப் பணிப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. ஹைட்ராபாத்தை பிறப்பிடமாகக் கொண்ட நடெல்லா 1992ஆம் ஆண்டு மைக்ரோசொப்ட் நிறுவனத்தில் இணைந்து கொண்டார். இலத்திரனியல், கணனி மற்றும் வியாபார நிர்வாகம் ஆகிய துறைகளில் நடெல்லா பட்டங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார். சத்யா நடெல்லாவை விடவும் சிறந்த ஒருவர் மைக்ரோசொப்ட் நிறுவனத்தை வழிநடத்த முடியாது என பில்கேட்ஸ் புகழாரம் சூட்டியுள்ளார். சத்யா மிகச் சிறந்த தலைவர் என்பதனை தமது திறமைகளினால் நிரூபித்துக் காட்டியுள்ளார் என அவர் தெரிவித்துள்ளார

## பனியால் அவதிப்படும் கனேடிய மக்கள்



கனடாவில் பனிப்பொழிவின் தாக்கத்தால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். கனடாவின் ரொறன்ரோ மாகாணத்தில் தொடர்ந்து நிலவிவரும் பனிப்பொழிவால் சாலைகளில் வாகனங்களை வேகமாக ஓட்டவேண்டாம் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனைதொடர்ந்து Golden Horseshoe, north of Lake Ontario பகுதிகளுக்கு செவ்வாய் நடுஇரவு வேளையில் பரவும் பனிப்பொழிவு இன்று ஒன்றாரியோவின் கிழக்குப் பகுதிக்கும் பரவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ரொறன்ரோவின் பல பகுதிகளில் இன்று விடியும் முன்பே சிறிதளவான பனிப்பொழிவை எதிர்பார்க்கலாம் என தெரிவித்துள்ளனர்.

மேலும் நைகரா, ஹமில்ரன், பகுதிகளில் 15 சென்டி மீற்றரிலும் பார்க்க அதிகளவான பனிப்பொழிவு இருக்கலாம் என்றும் Oakville. Burlington. Hamilton. Niagara ஆகிய பகுதிகளுக்கு பனி எச்சரிக்கை விடப்பட்டுள்ளது எனவும் கூறியுள்ளனர். இதுகுறித்து விமான நிலைய அதிகாரிகள் கூறுகையில், இப்பனிப்பொழிவினால் விமான சேவைகளில் தாமதங்கள் நிகழலாம் என்பதால் பயணிகள் விமான நிலையங்களை அனுகும் முன்பே விமான சேவை விபரத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் அதன் பின் விமான நிலையத்திற்கு வருகை தரலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

## மியன்மாரில் உடைத்து நொருக்கப்பட்ட வீடுகள்



இராணுவ ஆட்சி நடைபெற்ற மியான்மரில் தற்போது மெல்ல மெல்ல ஜனநாயகம் மலர்ந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் யாங்கூன் புறநகர் பகுதியில் ராணுவத்திற்கு சொந்தமான இடங்களில் மக்கள் சட்டவிரோதமாக குடியிருந்து வந்தனர். சுமார் ஆயிரம் குடும்பங்கள் அங்கு வாழ்ந்து வந்தனர். இராணுவத்திற்கு சொந்தமான இப்பகுதியை காலி செய்ய வேண்டும் அரசு அறிவிப்பு விட்டது. ஆனால், மக்கள் யாரும் அப்பகுதியை காலி செய்து செல்லவில்லை.

இதையடுத்து கோபம் கொண்ட மியான்மர் அரசு, புல்டோசர்களை வைத்து அந்த வீடுகளை எல்லாம் இடித்து தள்ளியது.

என்ன செய்வது, எங்கு செல்வது என்று புரியாத மக்கள் அப்போது அழுது புலம்பிய காட்சிகள் பார்ப்போரின் கண்களில் கண்ணீரை வரவழைப்பதாக இருந்தது என்று கூறப்படுகிறது.

## ஆசியாவின் ஹிட்லராக மாறும் ஜப்பான்

ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயை ஆசியாவின் ஹிட்லர் என்று வடகொரியா வர்ணித்துள்ளது. இது தொடர்பாக வடகொரிய அரசு சார்பு பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடகொரியாவின் ஏவுகணை மற்றும் அணு ஆயுதங்கள் மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருப்பதாக காரணம் காட்டி, தனது நாட்டு இராணுவத்தை விரிவுபடுத்துவதை நியாயப்படுத்தி வருகிறார் ஷின்சோ அபே. ஜப்பான் மீது முன்வைக்கப்படும் சர்வதேச அளவிலான விமர்சனங்களை, வேறு நாட்டின் (வடகொரியா) மீது திசை திருப்ப முயற்சிக்கிறார். பாசிஸ கொள்கையுடைய ஜேர்மனியின் ஹிட்லருக்கும், வடகொரியாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் ஷின்சோ அபேக்கும் எந்தவொரு வித்தியாசமும் இல்லை என்று அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின், ஜப்பானின் அரசமைப்புச் சட்டம் அமைதிக் கொள்கை உடையதாக உருவாக்கப்பட்டது. அந்நாடு, தனது இராணுவத்தை தற்காப்புப் படை என்றே அழைத்து வருகிறது. ஆனால், சமீப காலமாக வட கொரியா, சீனாவுடனான கருத்து வேறுபாடுகள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து, ஜப்பானின் கொள்கையில் மாற்றம் ஏற்படலாம் எனத் தெரிகிறது.

சமீபத்தில் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே பேசுகையில், 2020ஆம் ஆண்டு ஜப்பான் அரசமைப்புச் சட்டத்தை காலத்துக்கு ஏற்ப மாற்ற முடிவு செய்துள்ளோம். இதுவரை தற்காப்புப் படையாக இருந்த இராணுவம், முழு அளவிலான தாக்குதல் திறன்மிக்கதாக மாற்றியமைக்கப்படும். பிராந்திய அளவில் சமநிலையை பேணுவதற்காக இந்த மாற்றம் அவசியமாகிறது என்று கூறியிருந்தது நினைவுகூரத்தக்கது.

## இங்கிலாந்தை புரட்டிப் போட்ட சூறைக்காற்று



இங்கிலாந்து நாட்டின் பல பகுதிகளில் சூறைக்காற்றுடன் பல பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால், 14 ஆயிரம் வீடுகள் இருளில் மூழ்கின. இங்கிலாந்தின் தென் கிழக்கு பகுதிகளில் கடுமையான சூறைக்காற்றுடன் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் நகரமே வெள்ளக்காடாக காட்சி அளிக்கின்றது, வெள்ள நீரின் அரிப்பால் செயிண்ட் டேவிட்ஸ்-டாவ்லிஷ் ரெயில் நிலையங்களுக்கு இடையில் தண்டவாளம் சேதமடைந்துள்ளது. இதன் விளைவாக அந்த பாதை வழியாக செல்லும் இரயில்களில் பயணம் செய்வதை தவிர்க்கும்படி பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அவ்வழியே செல்லும் ரெயில்களை மணிக்கு 40 கிலோ மீட்டர் வேகத்துக்கு மேல் இயக்க வேண்டாம் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. டெவொன் மற்றும் கார்ன்வால் பகுதியில் மழையுடன் சேர்ந்து மணிக்கு 80 மைல் (128.748) வேகத்தில் பலத்த சூறாவளிக் காற்று சுழற்றியடித்தது. இதனால் சுமார் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் இருளில் மூழ்கியுள்ளன. இந்த வார இறுதி வரை பலத்த மழை பெய்யும் எனவும், மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## சுடச்சுட கிடைக்கும் மலைப்பாம்பு பீட்சா



உலகின் பல நாடுகளில் வாழும் மக்கள் மிகவும் விரும்பி சாப்பிடும் உணவுகளில் பீட்சாவும் ஒன்று. இரண்டு ரொட்டிகளுக்கு இடையே பச்சை வெங்காயம், தக்காளி, குடை மிளகாய், வெள்ளரிக்காய், அரை வேக்காட்டு உருளைக்கிழங்குடன் சிறிதளவு பாலாடைக்கட்டி வைத்து விற்கப்படும் சைவ பீட்சாவும், உள்புறத்தில் காய்கறிகளுக்கு பதிலாக மாடு, ஆடு, கோழி இறைச்சி வகைகளை அடைத்து விற்கப்படும் அசைவ பீட்சாவும் உலகம் முழுவதும் பரவலாக விற்கப்படுகின்றன.

இந்நிலையில் தற்போது அமெரிக்காவின் ஃப்ளோரிடா மாநிலத்தில் புது வகையான பீட்சாக்கள் பிரபலமடைந்து வருகின்றது, அதாவது சுடச்சுட மலைப்பாம்பு பீட்சாக்களை பரிமாறி மக்களை பரவசப்படுத்தி வருகின்றது. இதற்காக பர்மா மலைப்பாம்பு என்ற வகை பாம்புகளை வெட்டி, அவற்றை அரை வேக்காடாக அவித்து, பின்னர் மசாலா பொருட்களுடன் கலந்து பொரித்து, ஒவ்வொரு பீட்சாவுக்குள்ளும் ஒரு மலைப்பாம்பு துண்டு இருக்கும் வகையில் கொடுக்கின்றனர்.







பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

சகல விதமான தையல் இயந்திரங்களும் தங்கள் இருப்பிடத்திற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 077 6906182

# விந்தை உலகம்

## 5 வயது சிறுவனின் கின்னஸ் சாதனை

பெங்களூரை சேர்ந்தவர் சதீ - ஹேமா தம்பதியின் மகன் ககன்(5). இவன் பசவேஸ்வரா நகரிலுள்ள ஒரு தனியார் பாடசாலையில் எல்.கே.ஜி. படித்து வருகிறான். இந்த சிறுவன் ஸ்கேட்டிங் விளையாட்டில் மிகக்குறைந்த நேரத்தில் அதிக தூரம் பயணித்து கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்து உள்ளான். பெங்களூரில் நடைபெற்ற ஸ்கேட்டிங் போட்டியில் ககன் பங்கேற்றான். இதற்காக 39 கார்கள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன. அதாவது சுமார் 69.2 மீட்டர் தூரத்துக்கு கார்கள் நின்றன. காரின் அடிப்பகுதிக்கும், தரைக்கும் இடையிலான உயரம் வெறும் 8 அங்குலம் தான் இருந்தது. அவ்வளவு குறுகிய இடைவெளிக்குள் ககன் ஸ்கேட்டிங் உபகரணத்தை அணிந்து கொண்டு உடலை வில்லாக வளைத்து பயணித்து இலாவகமாக வெளியே வந்தான். சுமார் 69.2 மீட்டர் தொலைவையும் வெறும் 28 நொடியில் கடந்து சாதனை படைத்தான். இதற்கு முன்பாக பெல்காமை சேர்ந்த ரோகன் என்ற 9 வயது சிறுவன் 24 கார்கள் அணிவகுத்து நிற்க அதற்கு அடியில் பயணித்து 47 நொடிகளில் கடந்ததே சாதனையாக இருந்தது. ககன் இந்த சாதனை மூலம் ரோகனை பின்னுக்குத் தள்ளிவிட்டு புதிய உலக சாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்து உள்ளான்.




## முழுவதும் கண்ணாடியாக காட்சியளிக்கும் அபூர்வ மீன்.....

உலகில் மிக அபூர்வமாக தென்படும் அரியவகை கண்ணாடி மீன் நியூசிலாந்தை சேர்ந்த ஒரு மீனவரின் வலையில் சிக்கியுள்ளது. நியூசிலாந்தின் வடபகுதியில் உள்ள கரிகரி வளைகுடா பகுதியில் அந்நாட்டை சேர்ந்த ஃப்ரேஸர் என்பவர் தனது மகன்களுடன் மீன் பிடித்து கொண்டிருந்தார்.

அப்போது கடல் நீரின் மேற்பரப்பில் கண்ணாடி போன்ற பளபளப்பான ஏதோ ஒரு அழகிய பொருள் நெளிந்து, நெளிந்து செல்வதை கண்டு வியப்படைந்த அவர், தனது கைவலையை இலாவகமாக வீசி அந்த அபூர்வ மீனை சிறைபிடித்தார். அதனை சோதனையிட்ட கடல் உயிரியல் ஆய்வக அதிகாரிகள் பிடிபட்ட இந்த அரியவகை மீன், "ஸல்பா மகியோர்" என்ற இறால் வகை மீன் இனத்தை சேர்ந்தது என்றும், மிக அபூர்வமாகவே இவை கடலின் மேற்பரப்பில் தென்படும் என்றும் கூறியுள்ளனர். முழுக்க முழுக்க கண்ணாடி போன்ற வடிவில் உள்ள இந்த மீனின் உடல் வழியாக ஊடுருவி, எதிர்புறத்தில் உள்ள பொருட்களை துல்லியமாக பார்க்க முடிகிறது.

முதுகெலும்பு இல்லாத இந்த மீனின் இரைப்பை பகுதியில் உள்ள ஒரேஞ்சு நிற அழுக்கு மட்டும் "பளிச் என்று வெளியே தெரிகிறது" என்று இந்த மீனை பிடித்தவரின் மகன்களில் ஒருவனான ஃபின் என்ற சிறுவன் ஆச்சரியத்துடன் கூறுகிறான்.





விசுவமடு மத்திய சனசமூக நிலையத்தின் பொதுநூல் நிலைய திறப்புவிழா திரு ந.முகுந்தன் தலைமையில் கடந்த 23.01.2014 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர்திரு நா.வேதநாயகம் (மாவட்ட செயலாளர், முல்) அவர்களும், சிறப்புவிருந்தினர்களாக திரு.ந.பிரபாகரன் (உள்ளூராட்சி உதவி ஆணையாளர், முல்), திரு.சி.சத்தியசீலன் (பிரதேச செயலாளர், பூநகரி), திரு இ.பிரதாபன் (பிரதேசசெயலாளர்-புதுக்குடியிருப்பு), தலைவர் (சிறுவர் அபிவிருத்தி நிறுவனம், யாழ்), ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக லெப் கேணல் HMG இனோஜ் (பிரதேச இராணுவப் பொறுப்பதிகாரி), திரு ஜி.எஸ் பரமேஸ்வரன் (கோட்டக்கல்விப் பணிப்பாளர், புதுக்குடியிருப்பு), திரு சி.சிவரூபன் விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), திரு கு.மிதிலைநாதன் (பிரதேசசபை செயலாளர், புதுக்குடியிருப்பு), திரு குவிக்ரா ஜெயசிங்கம் (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், புதுக்குடியிருப்பு) ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர். இந்நிகழ்வின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை கீழே காணலாம்.








ABISHA BOOK SHOP & COMMUNICATION

அபிஷா புக் சொப் & கொமினிகேஷன்

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அனைத்துவிதமான பாடசாலை உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், பயிற்சிப்புத்தகங்கள், போட்டோக்கொப்பி பிரதிகள், பெக்ஸ் வசதிகள், தொலைபேசி அழைப்பு வசதிகள் மற்றும் தமிழ் பத்திரிகைகள் என்பவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம். சர்வதேச பாடசாலைகளுக்கான புத்தகங்களையும் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.சர்வதேச பாடசாலைகளுக்கான புத்தகங்களையும் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தலவாக்கலை பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக

இல.137, நுவரெலியா வீதி, தலவாக்கலை.
தொ.பே: 052 2258437, 072 7258437, 072 3978924, 0777642537

ஐஸ்கிறீம் கோன் தயாரிக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு





தொடர்புகளுக்கு:- P.துரைராஜா
244B,தேக்கந்தோட்டம்,வவுனியா.
0770240341

இப்பத்திரிகை இலக்கம் 165A, குருமன்காட்டில் அமைந்துள்ள G.H அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 09.02.2014 அன்று வெளியிடப்பட்டது.